**12**ஆம் வகுப்பு

# மார்ச் - 2017

## பகுதி - I - தமிழ் - முதல் தாள்

[செய்யுளும், இலக்கணமும்]

**[நேரம் : 3 மணி]** **[மதிப்பெண்கள் : 100]**

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
(ii) வினா எண் VI-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக : **[4 × 2 = 8]**

1. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?
2. மறவற்க எனவும் துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
3. வளன் செனித்த படலம் உரைப்பது யாது?
4. 'அந்தாதி' – விளக்குக.
5. மேகக் கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப் பெறுகின்றன?
6. சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்றழைக்கப்படக் காரணம் யாது?

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **[3 × 4 = 12]**

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்? ஏன்?
8. நற்றாய் காக்கைக்குப் பராய் கடன் உரைத்தவாற்றைப் புலப்படுத்துக.
9. பொறையுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.
10. கம்பராமாயணம் – குறிப்பு வரைக.
11. 'கடமை புரிந்தான் இவனே' – இடஞ்சுட்டுக.

**III.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **[3 × 4 = 12]**

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை?
13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற் பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.
14. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை?
15. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார்?
16. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

**IV.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில்** விடை எழுதுக. **[1 × 8 = 8]**

17. அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் தெரிவிக்கப் பெற்றுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
18. கண்ணகியின் சூளுரையும் நகர்மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை?
19. குழந்தைத் தொழிலாளர் அவலநிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

**V.** **பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக :** **[4 × 1 = 4]**

20. 'புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி'
(அ) இவ்வடி அமைந்துள்ள செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது?
(ஆ) இவ்வடி அமைந்துள்ள செய்யுளைப் பாடியவர் யார்?
(இ) இது யார் யாரிடம் கூறியது?
(ஈ) 'புரவி' என்னும் சொல்லின் பொருள் யாது?

(அல்லது)

21. 'தோர்த்த பாங்கினர் தொழும்பர் என்று ஆகுவர்'
(அ) இவ்வடி அமைந்துள்ள செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது?
(ஆ) மேற்கண்ட செய்யுளடியின் ஆசிரியர் யார்?
(இ) இது யார் கூற்று?
(ஈ) 'தொழும்பர்' என்னும் சொல்லின் பொருள் யாது?

**VI.**

22. "கண்டனென்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடி பிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. **[4 + 2 = 6]**
23. "எழுமை" எனத் தொடங்கும் செய்ந்நன்றியறிதல் அதிகாரத் திருக்குறளையும் "நோய்" என முடியும் அறிவுடைமை அதிகாரத் திருகுறளையும் அடி பிறழாமல் எழுதுக. **[2 + 2 = 4]**

**VII.**

24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு **உறுப்பிலக்கணம்** தருக : **[2 × 2 = 4]**
(அ) வாழ்த்துவம் (ஆ) செய்க
(இ) ஈன்ற (ஈ) காணீர்
(உ) ஆடுகின்ற (ஊ) வேண்டேன்
25. **எவையேனும் மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக : **[3 × 2 = 6]**
(அ) வாழிய வாழிய (ஆ) மலர்தல்
(இ) தடந்தோள் (ஈ) அவியா
(உ) பசிக்கயிறு (ஊ) கடும்பகை
26. **எவையேனும் இரண்டு** தொடர்களைப் பிரித்து புணர்ச்சி விதி தருக: **[2 × 2 = 4]**
(அ) பகலுறை (ஆ) பெருந்தேர்
(இ) பூங்கொடியாள் (ஈ) பெண்ணரசு
(உ) சொற்பதம் (ஊ) மணிக்கழுத்து
27. சான்று தந்து விளக்குக: **[1 × 4 = 4]**
பொதுவியல் திணை

(அல்லது)

புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது – துறை.

28. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து
– இக்குறளில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக. **[1 × 4 = 4]**

(அல்லது)

உவமை அணி – சான்று தந்து விளக்குக.

(அல்லது)

தற்குறிப்பேற்றவணி – சான்று தந்து விளக்குக.

**VIII. பொருத்துக : [4 × 1 = 4]**

| | | | |
|---|---|---|---|
| 29. | சுவடி | – | சிக்கனம் |
| 30. | வெய்யோன் | – | உள்ளம் |
| 31. | செட்டு | – | கதிரவன் |
| 32. | சிந்தை | – | அறியாமை |
| | | – | நூல் |

**IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து வினா குறியீட்டு எண்ணுடன் விடையையும் சேர்த்து எழுதுக. [16 × 1 = 16]**

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் :
(அ) சிவன் (ஆ) திருமால்
(இ) முருகன்

34. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல்:
(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு
(இ) புறநானூறு

35. 'நெடுந்தொகை' என்றும் வழங்கப்படும் நூல் :
(அ) புறநானூறு (ஆ) அகநானூறு
(இ) பரிபாடல்

36. 'பெருநாவலர்' என்னும் பெயரால் பாராட்டப்படும் புலவர் யார்?
(அ) திருவள்ளுவர் (ஆ) கபிலர்
(இ) அம்மூவனார்

37. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு :
(அ) படலம் (ஆ) இயல் (இ) காதை

38. 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக' என்று வேண்டிக் கொண்டவர் யார்?
(அ) இளங்கோவடிகள்
(ஆ) சீத்தலைச் சாத்தனார் (இ) ஒட்டக்கூத்தர்

39. தாம் இயற்றிய இராம காதைக்குக் கம்பர் இட்ட பெயர் :
(அ) வழிநூல் (ஆ) ஆதிகாவியம்
(இ) இராமாவதாரம்

40. 'கொன்ஸ்டான்' என்னும் சொல்லுக்குப் பொருள் :
(அ) கொன்றவன் (ஆ) அஞ்சாதவன்
(இ) வேற்று நாட்டவன்

41. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' – என்னும் பாடலின் ஆசிரியர்.
(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார்
(இ) வாணிதாசன்

42. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படுபவர் :
(அ) கம்பர் (ஆ) ஒட்டக்கூத்தர்
(இ) இளங்கோவடிகள்

43. பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் சிறப்புப் பெயர் யாது?
(அ) புரட்சிக்கவி (ஆ) ஆதிகவி
(இ) திவ்விய கவி

44. 'முச்சங்கம் வளர் கூடலிற் சென்று புகலீர்' – 'கூடல்' எனக் குறிக்கப்படுவது யாது?
(அ) மதுரை (ஆ) காஞ்சி
(இ) பூம்புகார்

45. "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்" – என்று பாடியவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன்
(இ) பாரதியார்

46. 'தமிழ் – பிரஞ்சு கையகர முதலி' என்ற நூலை வெளியிட்டவர் :
(அ) வாணிதாசன் (ஆ) கம்பதாசன்
(இ) சுப்புரத்தினதாசன்

47. உவமைக் கவிஞர் சுரதா எழுதிய நூல்களுள் ஒன்று :
(அ) சுட்டுவிரல் (ஆ) தேன்மழை
(இ) எழிலோவியம்

48. 'சின்னச் சீறா' என்னும் நூலை எழுதியவர் :
(அ) உமறுப்புலவர் (ஆ) குணங்குடி மஸ்தான்
(இ) பனுஅகுமது மரைக்காயர்

**X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : [2 + 2 = 4]**

49. தினைத்துணை _______ செயினும் பனைத்துணையாக் _______ பயன்தெரி வார்.

50. அஞ்சுவ தஞ்சாமை _______ அஞ்சுவ
தஞ்சல் அறிவார் _______.

❖ ❖ ❖ ❖

## விடைகள்

## தமிழ் - முதல் தாள்

**I.**

1. முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச் சங்கப்புலவர்கள் எனப் பலருடைய வரலாற்றுக் குறிப்புகள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், அரசியல், போர்த்திறம், சமுதாயப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நன்கு அறியலாம்.

2. 1) மறவற்க : குற்றமற்ற நல்லவர் நட்பினை மறத்தல் கூடாது.
2) துறவற்க : துன்பம் நேர்ந்த காலத்தில், நமக்கு உதவி செய்தவர்களின் நட்பை விட்டு விலகக்கூடாது.

3. தேம்பாவணியின் காப்பியத் தலைவனான வளன் என்னும் சூசை மாமுனிவர் தாவீது மன்னனின் அரச மரபில் தோன்றிய வரலாற்றை உரைப்பதுவே வளன் செனித்த படலம் ஆகும்.

4. 1) அந்தம் + ஆதி – அந்தாதி.
2) அந்தம் என்ற சொல்லுக்கு இறுதி என்றும், ஆதி என்ற சொல்லுக்கு முதல் என்றும் பொருள்.
3) ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.
4) இதனைச் 'சொற்றொடர் நிலை' என்று வழங்குவதும் உண்டு.

5. **மேகக் கூட்டங்கள் :**
1) தீயின் குழம்புகள்
2) பசும்பொன் காய்ச்சி ஓடவிட்ட ஓடைகள்

வெப்பம் இன்றி எரியும் தங்கத் தீவுகள்
4) நீலப் பொய்கைகள்
5) கரிய பெரும் பூதம்
6) நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத் தோணிகள்
7) பொன் கரையிட்ட கருநிற மலை மேகங்கள்
8) இருட்கடலில் மிதக்கும் தங்கத் திமிங்கலங்கள் என உருவகம் செய்யப் பெறுகின்றன.

6. சிவபெருமான் சுந்தரரைத் தம் தோழராகக் கொண்டமையால் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கப்படுகிறார்.

## II.

7. 1) இது நம் இந்திய நாடு. இது நமக்கே உரிமையானது.
2) நாள்தோறும் இந்தியர் அனைவரும் இந்திய நாட்டைப் போற்றிப் பாட வேண்டும்.
3) ஏனெனில், இந்த நாட்டை உரிமை கொண்டாட முடியா அந்நியர் இங்கு வந்து ஆண்டனர்.
4) இந்தியர் பொறுப்பின்றி வாழ்ந்த காலங்கள் கழிந்தன.
5) நம் வாழ்வு வளர பிறரை நம்பிய காலங்கள் மறைந்தன.
6) இன்று முதல் இந்தியா நமக்கே உரிமையானது என்னும் எண்ணத்தை எல்லோரும் கொள்ள வேண்டும் என நாமக்கல்லார் குறிப்பிடுகிறார்.

8. 1) நற்றாய் காக்கைக்குப் பராய்க் கடன் உரைத்தல் – குற்றம் சிறிதும் இல்லாத சிறகினை உடைய சிறிய கருநிறமுள்ள காக்கையே! கேள்.
2) "பேரன்புமிக்க முறைமையினை உடைய உன்னுடைய சுற்றத்தோடு நீ உண்ணும்படி பச்சை ஊன் இடப்பட்டுச் சமைக்கப்பட்ட உணவினைச் சிறந்த பொன்னால் செய்யப்பட்ட பாத்திரத்திலே இட்டு, 'பலிக்கடன்' செய்வேன்.
3) அதற்குக் கைம்மாறாய், அழகிய சிலவாகிய கூந்தலை உடைய என் மகளை, அவள் தேர்ந்து கொண்ட தலைவனோடு என் இல்லத்திற்கு விரைந்து வருமாறு கரைந்தருள வேண்டும்".

9. **பொறையுடைமையின் சிறப்புகள்:**
1) பூமி தன்னைத் தோண்டுபவரையும் தாங்கிக்கொண்டு இருக்கின்றது. அதனைப்போல, நம்மை இகழ்பவரையும் பொறுத்துக் கொள்ளுதல் தலைசிறந்த அறமாகும்.
2) பிறர் நமக்கு அளவுக்கதிகமாக தீமை செய்தாலும் பொறுத்துக்கொள்ளுதல் நன்று. அத்தீமையை மறந்துவிடுதல் பொறுத்தலைக் காட்டிலும் நன்று.
3) அறிவிலார் செய்யும் தீமையைப் பொறுத்துக் கொள்வது வன்மையுள் வன்மை ஆகும்.
4) நற்குணங்கள் நம்மைவிட்டு நீங்காதிருக்க வேண்டுமானால் பொறுமை என்னும் நற்குணத்தை அழியாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

10. 1) கம்பரால் இயற்றப்பட்ட நூல் ஆதலின் கம்பராமாயணம் எனப் பெயர்பெற்றது.
2) கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார்.
3) வான்மீகியின் இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்ட காவியம் ஆதலின் இதுஒரு வழிநூல் ஆகும்.
4) இராம + அயநம் – இராமனைப் பற்றிய செய்திகளை அறிவிக்கும் நூலாகும்.
5) இது திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.
6) கம்பராமாயணம் ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் கொண்டது.
7) காண்டம் என்பது பெரும்பிரிவு, படலம் என்பது காண்டத்தின் உட்பிரிவு,

| | |
|---|---|
| i) பால காண்டம் | ii) அயோத்தியா காண்டம் |
| iii) ஆரணிய காண்டம் | iv) கிட்கிந்தா காண்டம் |
| v) சுந்தர காண்டம் | vi) யுத்த காண்டம் |

என ஆறு பெரும்பிரிவுகளைக் கொண்டது.
8) 10589 பாடல்களைக் கொண்டது. கம்பராமாயணத்தைக் 'கம்ப நாடகம்', 'கம்ப சித்திரம்' எனவும் கற்றோர் கூறிக் களிப்படைவர்.

11. **'கடமைபுரிந்தான் இவனே'**
**இடம் :** பாரதிதாசன் படைத்த 'பாண்டியன் பரிசு' எனும் நூலில் புயலால் படகு கவிழ்ந்து வெள்ளத்தில் தவித்த தன்னைக் காப்பாற்றிய வேலனைச் சுட்டிக்காட்டி ஆத்தாவிடம் அன்னம் கேட்டது இது.
**பொருள் :** 'அந்தக் கடமை புரிந்த வீரன் இவன்தான்'
**விளக்கம் :** ஆத்தா, வேலன் தான் தன் மகன் என்றாள். அன்னத்தை வேழநாட்டார் சிறைப்பிடித்துச் செல்லவிருந்த பொழுதில் வேலன் அவர்களோடு போரிட்டு மீட்டான். ஏனெனில் மன்னனையும் மன்னன் இல்லத்தையும் காப்பதுதான் மக்களின் கடமையாகும் என்ற பொருளில் ஆத்தா கூறியது 'அந்தக் கடமை புரிந்த வீரன் இவன் தான்' என்பதாகும்.

## III.

12. **தலைவி மேகத்திடம் மொழிந்தத் தூதுமொழிகள் :**
1) செந்தாமரை மலரைப்போன்ற திருக்கண் வளர்கின்ற திருமாலைப் போலப் பொதிய மலையின் பக்கங்களிலே தங்கியிருக்கும் மேகங்களே!
2) அழகிய இளந்திங்களும் இரையைத் தேடுகின்ற குயிலின் குஞ்சும் என் உயிரை வாய்விட்டுப் புசிப்பதால், யான் ஒழிகின்றேன்.
3) இச்செய்தியை மேரு மலையிலும், கயிலாய மலையிலும், பொதிய மலையிலும் எழுந்தருளியிருப்பவரும் தடாதகைப்பிராட்டியின் கணவருமாகிய மதுரையில் கோவில் கொண்டுள்ள சோமசுந்தரப் பெருமானிடம் சென்று கூறுவாயாக.

13. 1) சூரியக்கிரணங்கள் காயக் கண்டது; மக்கள் வயிறு காயக் கண்டதில்லை.
2) கலங்கக் கண்டது வெண் தயிர்க்கட்டிகள்; மக்களுடைய மனங்கள் கலங்கக் கண்டதில்லை.
3) அழியக் கண்டது நாழிகையும் வாரமும். மக்கள் பசியால் அழியக் கண்டதில்லை.
4) சுழலக் கண்டது பெருஞ்சுழலாய் ஓடி வருகின்ற வெள்ளம்; மக்கள் வாட்டமுற்றுச் சுழல்வதைக் கண்டதில்லை.
5) தலை சாயக் கண்டது முற்றிய செந்நெல்; மக்கள் தலைகுனியக் கண்டதில்லை.
6) தனித்திருக்கக் கண்டது முனிவரின் உள்ளம்; கணவன் மனைவியர் தனித்திருந்ததில்லை.
7) தேய்வினைக் கண்டது அரைத்திடும் சந்தனக்கட்டை; செய்யுளில் பொருள் தேய்வினைக் கண்டதில்லை.

14. 1) சுவடிச்சாலையில் பல்கலைக்கழகத்தில் பலதுறை நூல்கள் இருப்பது போலத் தமிழர்களுக்கு அவர்களுடைய தாய்மொழியில் எழுதப்பட்ட நூல்கள் இருத்தல் வேண்டும்.

நல்ல தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழில் இல்லாத பிறமொழி நூல்கள் இடம் பெறவேண்டும்.

3) செந்தமிழில் ஆக்கப்பட்ட அமுதம் போன்ற இனிய கவிதை நூல்கள் இடம்பெறல் வேண்டும்.

4) அழகுடைய உரைநடை நூல்கள் கருத்தமைந்தனவாய்ப் பெருமளவில் இடம்பெற வேண்டும்.

5) அவற்றையும் பொருள் வரிசையில் பிரித்துப் பகுத்து வைத்திருத்தல் வேண்டும்.

15. **சிக்கனம் பற்றி உவமைக் கவிஞர் சுரதாவின் பட்டியல்:**

1) உரைநடையின் சிக்கனம் – கவிதை;
2) உணர்ச்சிகளின் சிக்கனம் – அடக்கம்;
3) காதல் வரவேற்பின் சிக்கனம் – பெண்ணுடைய நாணம்;
4) மாளிகையின் சிக்கனம் – குடிசை;
5) உரிமைகளின் சிக்கனம் – சட்ட திட்டங்கள்;
6) உணவுகளின் சிக்கனம் – பங்கீடு;
7) அரசியலில் சிக்கனம் – இருகட்சி இருத்தல்;
8) அனுபவத்தின் சிக்கனம் – நீதி நூல்கள்.

16. 1) **குலசேகர ஆழ்வார் வேண்டுவன :** 'தேனைச் சொரிகின்ற மலர்ச்சோலையை உடைய திருவேங்கடமாகிய திருப்பதியில் உள்ள சுனையில் மீனாகப் பிறக்கின்ற நியதியை உடையேனாக அடியேன் ஆவேனாக,' என்று வேண்டுகிறார்.

2) **குலசேகர ஆழ்வார் வேண்டாதன :** 'எந்த நாளிலும் எந்த வகையிலும் குறைவுபடாத செல்வச் செழிப்புடன் விளங்கி, அழகில் சிறந்து விளங்கும் விண்ணுலகில் உள்ள தேவதூதர்கள் தன்னைச் சூழ்ந்திருக்கும்படி விண்ணரசாளும் செல்வச் சிறப்பையும், மண்ணரசாளும் தன்மையையும், அடியேன் விரும்பிடேன்,' என்று கூறுகிறார்.

## IV.

17. **“அறிவுடைமை” கருத்துக்கள் :**

1) **அறிவின் சிறப்பு :** அறிவு, அழிவு நேராமல் காக்கும் கருவிமட்டுமன்று; பகைவரால் அழிக்க இயலாத அரணுமாகும்.

2) **அறிவின் இலக்கணம் :** மனத்தைத் தீய வழிகளிலிருந்து நீக்கி நல்வழிப்படுத்துவதே அறிவாகும்.

3) எந்த ஒரு செய்தியை எவர் கூறக் கேட்டாலும் அந்தச் செய்தியின் உண்மைப்பொருளை ஆராய்ந்து காண்பதே அறிவாகும்.

4) பிறர் மனம் கொள்ளக் கூறும் அரிய கருத்துகளை எடுத்துரைத்துப் பிறர் கூறும் நுண்மையான கருத்துகளை அறிவதே அறிவாகும்.

5) உயர்ந்தவருடன் நட்பு கொள்ளவேண்டும். அது வளர்வதும் தேய்வதும் இன்றி, ஒரே அளவினதாக இருப்பதே அறிவாகும்.

6) உலகத்தார் எவ்வழி நடக்கின்றனரோ அவ்வழியை ஒட்டி நாமும் நடப்பதே சிறந்த அறிவாகும்.

7) **அறிவுடையாரது இலக்கணம் :** பின்னால் நிகழப்போவதை முன்கூட்டியே அறியக் கூடியவரே அறிவுடையார். அவ்வாறு அறிய முடியாதவர் அறிவிலார்.

8) பழிபாவங்களுக்கு அஞ்சிடாமல் வாழ்வது அறியாமை ஆகும். அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி நடத்தலே அறிவுடையோர் செயல் ஆகும்.

9) **அறிவுடையார்க்குத் துன்பம் இல்லை :** அறிவுடையவர்கள் பின்னால் வரப்போவதை முன்னால் அறியக் கூடியவர்கள். அவர்களுக்கு நடுங்கும்படியான துன்பங்கள் வருவதில்லை.

10) **அறிவுடையோரது உடைமை :** அறிவுடையவர்கள் வேறு எதுவும் பெற்றில்லாதவராகினும் அனைத்தும் உடையவரே ஆவார். அறிவில்லாதவர் பிற அனைத்தும் பெற்றிருந்தாலும் ஒன்றுமே இல்லாதவர் ஆவர்.

18. **கண்ணகி சூளுரை :**

1) கண்ணகி தன்னுடைய மற்றொரு சிலம்பைக் கையில் ஏந்திக் கொண்டாள். மதுரை நகர் வீதி வழியே சென்றாள்.

2) அவள் “முறையில்லாத அரசரது ஊரில் வாழும் கற்புடைய பெண்டிர்களே! இஃது என்னுடைய மற்றொரு சிலம்பு! இதைக் காணுங்கள்!

3) இம்மாலைப் பொழுதில் வேறு எவரும் படாத துன்பமுற்றேன்.

4) இக்கொடிய துன்பத்தை யான் அடையலாமா?

5) என் கணவன் கள்வன் அல்லன். என் காற்சிலம்பைக் கொள்ளும் பொருட்டாகக் கள்வன் எனக் கூறி, என் கணவனைக் கொன்றார்களே!

6) “என் கணவனை உயிருடன் காண்பேன். அவன் இனிய வாய்ச்சொல் கேட்பேன். அவ்வாறு நான் கேளாதொழிந்தால், இவள் நமக்கு வருந்தத்தக்கன செய்தாள் என்று என்னை இகழ்வீராக!” எனச் சூளுரைத்தாள்.

7) **நகர மாந்தர் மயங்கிக் கூறியன :** எவராலும் அகற்ற முடியாத துன்பத்தை இக்காரிகைக்குச் செய்து, என்றும் வளையாத செங்கோல் வளைந்ததே! இதன் காரணம் என்ன?

8) அரசர்க்கு அரசனும், வெண்கொற்றக் கொடையையும் உடைய பாண்டியனது அரசியல் அழிவுற்றதே! இதற்குக் காரணம் என்ன?

9) வேற்படையுடைய அவ்வரசனுடைய குளிர்ந்த குடை வெம்மை விளைவித்ததே! இதற்குக் காரணம் என்ன?

10) செம்பொன்னாலான சிலம்பு ஒன்றைக் கையிலேந்தி நம்மைக் கெடுக்க இப்புதிய தெய்வம் நம்மிடம் வந்து சேர்ந்ததே! இதனால் நமக்கு இனி என்ன நேருமோ?

11) மனம் ஏங்கிப் புலம்புவளாகிய இவள் தெய்வத்தன்மை உற்றவள் போலக் காணப்படுகின்றாள். இதனால் இனி என்ன விளைவு உண்டாகுமோ?

19. **பசியால் வாடுபவர்க்கு விளையாட நேரமில்லை :**

1) தங்கள் பசியை ஆற்றிக்கொள்ள, உணவுக்காக அலைகின்ற குழந்தைத் தொழிலாளர்களுக்குப் புல்லின் நுனியில் அமரும் தட்டாம்பூச்சிகளைப் பிடிக்க நேரம் ஏது?

2) தம்முடைய வறுமைத்துயரிலிருந்து மீள்வது எப்படி என்று தவிக்கும் இவர்களுக்குக் காகிதக்கப்பல் செய்து மிதக்க விட்டு விளையாட நேரம் ஏது?

3) இன்பமும் துன்பமும் நொடிப் பொழுதில் மாறுகின்ற தன்மை உடையவை. இவர்களுடைய வாழ்க்கையே கண்ணாமூச்சி காட்டிக் கழியும் போது இவர்களுக்குத் தம் நண்பர்களுடன் கண்ணாமூச்சி ஆட்டம் ஆட எப்படி இயலும்?

4) **பசிக் கயிற்றில் பம்பரமாகி விட்டவர்கள் பம்பரம் சுற்றுவதெங்கே :** பசிக்கொடுமையைப் போக்க பம்பரமாய்ச் சுழன்று வேலை செய்யும் இக்குழந்தைகளால் பம்பரம் சுற்றி விளையாட எவ்வாறு இயலும்?

5) **குழந்தைத் தொழிலாளரின் வாழ்க்கைச் சுமை :** இளம் வயதிலேயே இவர்களை எல்லாம் விளையாட விடாமல் தடுத்தவர்கள் யார்? பூக்களை ஏந்திக் கொண்டிருக்கும் மென்மையான காம்புகளைப் போன்ற இவர்களின் தலையில் வாழ்க்கைச் சுமையை ஏற்றி வைத்தவர் யார்?

6) **பலப்பம் பிடிக்க வேண்டிய சின்னஞ்சிறு விரல்களில் தீக்குச்சிகள்:** எழுதும் குச்சிகளைக் கொடுத்துப் பலகைகளில் எழுதிப் படிக்கவேண்டிய இவர்களுடைய கைகள் தீக்குச்சிகளை எடுத்து அடுக்கிக் கொண்டு இருக்கின்றன.

7) அறிவென்னும் வெளிச்சத்தைப் பெற வேண்டிய இந்த இளம் பருவத்தில், யாரோ தீக்குச்சிகள் மூலம் வெளிச்சத்தைப் பெறுவதற்காகத் தங்களுடைய கடின உழைப்பால் உருகி இவர்கள் தீக்குச்சிகளாகவே ஆகிவிட்டனர்.

8) **நிகழ்கால வாழ்வின் அழிவு :** இன்றைய குழந்தைகள் எதிர்காலத்தின் ஒளி விளக்குகள் என்று அழகழகாய்ச் சொற்களை அடுக்கிப் பேசுகின்றவர்கள் இக்குழந்தைகளின் நிகழ்கால வாழ்வு அழிந்துவிட்டதை ஏன் பார்க்கவில்லை?

9) **குழந்தைகள் தின விழா :** ஒவ்வோராண்டும் 'குழந்தைகள் தினம்' கொண்டாடுகின்றனர். அந்நாளைக் கொண்டாடுவதை விட்டுவிட்டு எப்போது குழந்தைகளை மதித்துக் கொண்டாடப் போகின்றீர்?

10) **முடிவுரை :** படிக்கும் வயதில் குழந்தைகள், தங்கள் குடும்பச் சுமையைச் சுமக்கும் நிலையைக் கவிஞர் அழகாகப் புனைந்துள்ளார்.

## V.

20. (அ) அகநானூறு (ஆ) பாரதம் பாடிய பெருந்தேவனார்
(இ) தலைவன் தேர்ப்பாகனிடம் கூறியது.
(ஈ) குதிரை.

**(அல்லது)**

21. (அ) தேம்பாவணி (ஆ) வீரமாமுனிவர்
(இ) கோலியாத்து (ஈ) அடிமைகள்

## VI.

22. கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்;
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர்நா யகஇனித் துறத்தி, ஐயமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்.
**பாவகை:** கலிவிருத்தம்

23. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.
எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

## VII.

24. (அ) வாழ்த்துவம் – வாழ்த்து + வ் + அம்
வாழ்த்து – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
அம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

(ஆ) செய்க – செய் + க
செய் – பகுதி
க – வியங்கோள் வினைமுற்று விகுதி

(இ) ஈன்ற – ஈன் + ற் + அ
ஈன் – பகுதி
ற் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

(ஈ) காணீர் – காண் + ஈர்
காண் – பகுதி
ஈர் – ஏவல் பன்மை வினைமுற்று விகுதி

(உ) ஆடுகின்ற – ஆடு + கின்று + அ
ஆடு – பகுதி
கின்று – நிகழ்கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

(ஊ) வேண்டேன் – வேண்டு + ஆ + ஏன்
வேண்டு – பகுதி
ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

25. (அ) வாழிய வாழிய – அடுக்குத் தொடர்
(ஆ) மலர்தல் – தொழிற்பெயர்
(இ) தடந்தோள் – உரிச்சொற்றொடர்
(ஈ) அவியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(உ) பசிக்கயிறு – உருவகம்
(ஊ) கடும்பகை – பண்புத்தொகை

26. (அ) பகலுறை = பகல் + உறை
விதி 1: **'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'.** நிலைமொழி ஈற்று மெய்யும் (ல்), வருமொழி முதல் உயிரும் (உ), புணர்ந்து (ல் + உ – லு)'**பகலுறை**' என்றானது.

(ஆ) பெருந்தேர் – பெருமை + தேர்
விதி 1: **'ஈறுபோதல்'.**
நிலைமொழி ஈற்று 'மை' விகுதி கெட்டு, 'பெரு + தேர்' என நின்றது.
விதி 2: **'இனமிகல்'.**
வருமொழி முதல் தகரத்திற்கு இனமான 'ந்' தோன்றி, 'பெரு + ந் + தேர் – பெருந்தேர்' என்றானது.

(இ) பூங்கொடியாள் – பூ + கொடியாள்
விதி 1: **'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்'.** 'பூ' என்னும் நிலைமொழி முன் வருமொழியின் முதல் (கொ) வல்லினம் வந்தது. இதன் இனமான மெல்லினம் (ங்) தோன்றி, 'பூ + ங் + கொடியாள் – பூங்கொடியாள்' என்றானது.

(ஈ) பெண்ணரசு – பெண் + அரசு
விதி 1: **'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்'.** நிலைமொழி பெண்ண் என இரட்டித்து 'பெண்ண் + அரசு' என ஆனது.

விதி 2: **‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’.**
ண் + அ – ண எனப் புணர்ந்து ‘பெண்ணரசு’ என்றானது.

(உ) சொற்பதம் – சொல் + பதம்
விதி 1: **‘லள வேற்றுமையில் றடவும்’.**
நிலைமொழி ஈற்று ல் – ற் ஆகி ‘சொற்பதம்’ என்றானது.

(ஊ) மணிக்கழுத்து – மணி + கழுத்து
விதி 1: **‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’.**
‘க்’ மிகுந்து ‘மணிக்கழுத்து’ எனப் புணர்ந்தது.

27. **பொதுவியல் திணை.**
**விளக்கம் :** வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியனார் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும், அத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.
**சான்று :** “பல்சான் றீரே பல்சான் றீரே” எனத் தொடங்கும் நரிவெரூஉத் தலையார் இயற்றிய புறநானூற்றுப் பாடல்.

**(அல்லது)**

**துறை :** புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது.
**துறை விளக்கம் :** பகற்குறியில் தலைவன் தலைவியைச் சந்தித்துச் செல்கின்றான். அப்பொழுது தோழி தலைவனை நோக்கி, “இவ்வாறு செல்வாயானால் மீண்டும் நீ வருவதற்குள் தலைவி இறந்து விடுவாள். ஆதலால் அதற்கு ஏற்றது செய்” என வரைவு (மணஞ் செய்து கொள்வது) தோன்றக் கூறுவது வரைவு கடாதலாகும்.
**சான்று :** “இறவுப்புறத்தன்ன” எனத் தொடங்கும் நக்கண்ணையார் இயற்றிய நற்றிணைப் பாடல்.
**துறைக்குப் பொருந்திய பாடல் விளக்கம் :** “தலைவனே! தலைவியைப் பிரிந்து உன் ஊருக்குச் செல்லும் நீ, விரைந்து வருதல் வேண்டும். நீ திரும்பி வருவதற்குச் சில நாட்களே என்றாலும் அதைத் தாங்காமல் தலைவி இறந்துவிடுவாள். எனவே நீ விரைந்துவந்து எம் தோழியாகிய தலைவியை மணந்து கொள்வாயாக!” என்று தோழி வேண்டிக் கூறுவதால் இப்பாடல் வரைவு கடாய துறையைச் சார்ந்தது ஆகின்றது.

28. **பயின்று வந்துள்ள அணி – சொற்பொருள் பின்வருநிலை அணி.**
**அணி இலக்கணம் –** செய்யுளில் இடம்பெறும் ஒரு சொல் அதே பொருளில் பலமுறை பயின்று வருதல் சொற்பொருள் பின்வருநிலை அணி எனப்படும்.
**அணிப் பொருத்தம் :** இக்குறட்பாவில் உதவி என்னும் சொல் நன்மை செய்தல் என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் பலமுறை வந்துள்ளது.

**(அல்லது)**

**உவமை அணி**
**அணி இலக்கணம் :** ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்குமாயின் அஃது உவமை அணி.
**சான்று :** அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை
**அணி பொருத்தம் :**
**உவமை –** அகழ்வாரைத் தாங்கும் நிலம்
**உவமேயம் –** தம்மை இகழ்வாரைப் பொறுப்பவர்
**உவம உருபு –** போல
**விளக்கம் :** பூமியானது தன்னைத் தோண்டுபவரையும் விழாமல் தாங்கிக்கொண்டிருக்கிறது. அதுபோல தம்மை இகழ்ந்து பேசுபவர்களையும் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

**(அல்லது)**

**தற்குறிப்பேற்ற அணி**
**அணி இலக்கணம் :** இயற்கையாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.
**சான்று :** செம்பொற்கொடி அனையாள்........
...... செங்கதிரோன் சென்றொளிப்ப –
(சிலப்பதிகாரம்)
**அணிப்பொருத்தம் :** மாலைப்பொழுதில் சூரியன் தன் கதிர்களைச் சுருக்கி மறைதல் இயல்பான நிகழ்ச்சி. கண்ணகி கணவனை இழந்து உற்ற துன்பத்தினையும் அவள் அழுததையும் காணப்பொறாமல் கதிரவன் தன் செங்கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மறைந்தான் என்று இளங்கோவடிகள் தம் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளார்.

**VIII.**

| | |
|---|---|
| 29. நூல் | 30. கதிரவன் |
| 31. சிக்கனம் | 32. உள்ளம் |

**IX.**

| | |
|---|---|
| 33. (இ) முருகன் | 34. (இ) புறநானூறு |
| 35. (ஆ) அகநானூறு | 36. (அ) திருவள்ளுவர் |
| 37. (இ) காதை | 38. (ஆ) சீத்தலைச் சாத்தனார் |
| 39. (இ) இராமாவதாரம் | 40. (ஆ) அஞ்சாதவன் |
| 41. (அ) பாரதிதாசன் | 42. (ஆ) ஒட்டக்கூத்தர் |
| 43. (இ) திவ்விய கவி | 44. (அ) மதுரை |
| 45. (இ) பாரதியார் | 46. (அ) வாணிதாசன் |
| 47. (ஆ) தேன்மழை | 48. (இ) பனுஅகுமது மரைக்காயர் |

**X.**

49. நன்றி, கொள்வர்
50. பேதைமை, தொழில்

❖ ❖ ❖ ❖

# மார்ச் - 2017

## பகுதி - II - தமிழ் - இரண்டாம் தாள்

**[உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்]**

**[நேரம் : 3 மணி]** **[மொத்த மதிப்பெண்கள் : 80]**

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின்** மிகாது விடை எழுதுக : [3 × 4 = 12]

1. தமிழ் உயர்மொழி, தனிமொழி என உரைக்கப்படக் காரணங்கள் யாவை?
2. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம். இக்கருத்தைத் திரு.வி.க. வழி நின்று ஆய்க.
3. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?
4. ஈகைப் பண்பில் தமிழ் மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.
5. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. [3 × 4 = 12]

6. அறுமுறை வாழ்த்து – விளக்குக.
7. கவிதையின் நோக்கம் குறித்து ஆசிரியர் சிதம்பரநாதர் கூறுவன யாவை?
8. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?
9. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை?
10. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

**III.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளின் மிகாது விடை எழுதுக. [1 × 6 = 6]

11. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.
12. தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?

**IV.** பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. [2 × 10 = 20]

13. 'மூக்கப் பிள்ளை வீட்டு விருந்து' **அல்லது** 'மகன்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**(அல்லது)**

'வேலி' **அல்லது** 'பால் வண்ணம் பிள்ளை' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'மண்' **அல்லது** 'ஒவ்வொரு கல்லாய்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**(அல்லது)**

நேர்மை தவறாத மாணிக்கம் அந்தப் பண்பில் தவறாது வாழ்க்கையில் பாடுபட்டு உயர்ந்ததாக ஒரு கதை எழுதுக.

**(அல்லது)**

கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

**V.**

15. **பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக.** [1 × 10 = 10]

விண்ணிடையே இரதம் ஊர்ந்து
 மேதினி கலக்கு தற்கும்
பண்ணிடைத் தமிழைச் சேர்த்து
 பாரிடை மயக்கு தற்கும்
மண்ணிடை வாளை ஏந்திப்
 பகைப்புலம் மாய்ப்ப தற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
 எனும்நிலை காண்ப தென்றோ?

கண்களும் ஒளியும் போலக்
 கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
 பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
 சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
 பருகுநாள் எந்த நாளோ? **– பாவேந்தர் பாரதிதாசன்**

**குறிப்பு:** காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக : [3 × 2 = 6]

16. Blood is thicker than water.
17. A friend in need is a friend indeed.
18. Diamond cuts diamond.
19. Many thanks for your kind message of greetings.
20. Writing essay is an art.
21. Education should develop and promote good values.

**VII.**

22. **பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்து (பத்து வரிகளில்) எழுதுக :** [1 × 4 = 4]

(அ) பதறிய காரியம் சிதறும்
(ஆ) வாய்மையே வெல்லும்
(இ) தன்கையே தனக்குதவி

**(அல்லது)**

**'நட்பு'** அல்லது **'இயற்கை அழகு'** என்னும் தலைப்பில் சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

**குறிப்பு :**

**காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. VI மற்றும் VII–இல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரை உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஏற்ற விடையை எழுதுக. [5×2= 10]**

இந்திய விண்வெளிப் பாதுகாப்புத்துறையின் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் இந்தியாவின் உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் விஞ்ஞானி. இவர் தனது வாழ்க்கையை ஆராய்ச்சிக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்தில் 15.10.1932–இல் பிறந்தார். இவரது முழுப் பெயர் அபுல் பக்கீர் ஜைனுலாப்தீன் அப்துல்கலாம்.

சிறுவயதிலேயே எதையும் கூர்ந்து நோக்கும் திறம் பெற்றிருந்தார். இவரது பெற்றோர் அந்தக் காலத்தில் இவர் விளையாட இரயில், ஆகாய விமானம் போன்ற பொம்மைகளை வாங்கித் தந்தால் அவற்றை உருட்டி விளையாடுவதற்குப் பதிலாக பொம்மைகளைத் தனித்தனியாகப் பிரித்துவிட்டு அவற்றை மறுபடியும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார். இத்தகைய முயற்சிகள் இவரை அறிவியல் துறையில் அதிக ஈடுபாடுள்ளவராக மாற்றின. அப்துல்கலாம் சிறுவனாக இருந்தபோது ஒரு நாள் ஒரு பத்திரிகையில் வெளியான புதுமையான அறிவியல் செய்தி அவரை மனதைக் கவரவே அது பற்றிய ஆராய்ச்சியில் அப்போதே ஈடுபடத் தொடங்கினார்.

குழந்தைப் பருவத்திலேயே அறிவியல் துறையில் அதிக ஈடுபாடு காட்டிய அப்துல்கலாம், திருச்சியில் தனது ஆரம்பகாலப் படிப்பைத் தொடங்கி, சென்னை எம்.ஐ.டி தொழில்நுட்பக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்தார். 1963–இல் ஐ.எஸ்.ஆர்.ஓ. என்ற பாதுகாப்புத் துறையில் சேர்ந்து பணியாற்றினார். இந்தக் கால கட்டத்தில்தான் 'ரோகிணி' என்ற செயற்கைக் கோளை ஏவுவதற்காக எஸ்.எல்.வி – 3 என்ற ராக்கெட்டை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றினார்.

**வினாக்கள் :**

16. அப்துல்கலாம் எவ்வாறு போற்றப்பட்டார்?
17. சிறுவனாக இருந்த போது அவரது மனதைக் கவர்ந்த நிகழ்ச்சி எது?
18. கலாம் அவர்களின் முழுப் பெயர் என்ன?
19. எத்தகைய முயற்சி இவரை அறிவியல் துறையில் ஈடுபடுத்தியது?
20. இவர் தனது பட்டப்படிப்பை எந்தக் கல்லூரியில் முடித்தார்?
21. 'ரோகிணி' என்ற செயற்கைக் கோளை ஏவியவர் யார்?
22. இவர் பணியாற்றிய நிறுவனத்தின் பெயர் யாது?

**VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக: [10×1=10]**

23. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே.
**(வாக்கியப் பிழையை நீக்குக)**
24. நீதான் என் அத்தியந்த ஸ்னேகிதன்.
**(வட மொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)**
25. கொத்தி திரியும் அந்த கோழி.
**(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)**
26. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க.
**(கொச்சைச் சொற்களைத் திருத்துக)**
27. இலை, இழை (அல்லது) ஒலி, ஒளி.
**(பொருள் வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக)**
28. 'வாழ்கத் தமிழ்' என்று அவனாச் சொன்னான். அறிந்துச் சொல் எனக்கு.
**(தேவையற்ற வல்லின மெய்யை நீக்கி எழுதுக)**
29. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.
**(ஆங்கிலச் சொல்லை நீக்கி இனிய தமிழில் எழுதுக)**
30. காகம் கூவும், நாய் கத்தும்.
**(மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக)**
31. சாறைப் பாம்பு குறுவிக் கூட்டில் நுழைந்தது.
**(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.)**
32. கீட்ஸ் கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை என்றார்
**(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக).**

❖ ❖ ❖ ❖

# விடைகள்

## தமிழ் - இரண்டாம் தாள்

**I.**

1. **தமிழ்மொழி உயர்மொழி :** வடமொழி, இலத்தீன், கிரீக்கு போன்று தமிழ்மொழியும் உயர்தனிச் செம்மொழியாகும். அது தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தலைமை சான்றது. அவற்றினும் மிக்க மேன்மையும் உடையது. எனவே, தமிழ் மொழி உயர்மொழியாகும்.

**தமிழ்மொழி தனிமொழி :** தமிழ்மொழியின் துணையை நீக்கினால், தெலுங்கு முதலியவை இயங்குதலை இழக்கும். ஆனால், தமிழோ அவற்றின் உதவியின்றியே இடர்ப்படுதல் இன்றி இயங்கப் பெறும். இஃது இந்திய மொழி நூல் ஆராய்ச்சி அறிஞர் பலரால் ஒப்ப முடிந்த முடிவாகும். எனவே, தமிழ்மொழி தனிமொழியே என்பதாம்.

2. **சாதிக்கொடுமை :** பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுதல் தவறு, எல்லாக் கொடுமைகளிலும் தலையாயது சாதிக் கொடுமையாகும். பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உள்ளத்தில் சமரசச் சாயல் படராது.

**சமயவெறி :** ஒருவனின் சமயவெறி, கடவுள் அன்பைக் கெடுக்கும். அவன் சமயவெறியால் சமயத்தின்மாட்டுப் பற்றுக்கொண்டு, பிற சமயத்தினரை நிந்திக்கின்றான். இஃது அறியாமையின்பாற்படும். சமயம் என்பது ஒன்றே. அதுவே சமரசம் என்பதாகும்.

பல சமய உணர்வும், தன் சமயப்பற்றும் சமரசத்தை அழித்துவிடுகின்றன. அதனால் சமயவெறி கூடாது எனத் திரு.வி.க. கூறுகிறார்.

3. **கீட்ஸ் :** 'கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை' என்றார். மேலும் அவர் 'ஆற்றலின் சிகரம்', என்றும் 'ஆற்றல் தன் வலப்புயத்தில் தலை சாய்த்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை' என்றும் கூறியுள்ளார்.

**ஜான் ரஸ்கின் :** 'சீரிய உணர்ச்சிக்குரிய காரணங்களைப் பாவனா சக்தியால் குறிப்பிடுவதே கவிதை' என்று இலக்கணம் வகுத்தவர் ஜான் ரஸ்கின்.

**பவணந்தி முனிவர் :** பலவகைத் தாதுக்களால் உயிர்க்கு இடமாகிய உடம்பு போல, நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாகக் கல்வியறிவால் செய்யுளியற்ற வல்லோர்களால் அழகுபெறச் செய்வதே கவிதை.

4. **இரத்தல் இழிவானது :** தமிழ் மக்கள் தொழில் செய்தே பொருள் தேடும் கொள்கையுடையவர்கள். ஆகவே, இரத்தலை இழிவாகக் கருதினார்கள். இரவாமல் இருக்கும் நிலையைப் "பிறன்கடைச் செலா அச் செல்வம்" எனக் கூறி மகிழ்ச்சியுற்றனர். பசுவுக்கு நீர் கேட்டலையும் இழிவாகக் கருதினர்.

**இயலாதோர்க்கு ஈதல் :** அத்தன்மையுடைய அரிய பெரிய வாழ்க்கை மறவர்கள் முயற்சியின்றிப் பிச்சை எடுத்து வாழ்தலை எள்ளத்தக்கதாகக் கருதி விரும்பவில்லை. எத்தகைய முயற்சியும் செய்ய இயலாத ஊனமுற்றோர், பிணியாளர் முதலானவர்கள் பிறரிடம் பொருள் எதிர்பார்ப்பது ஒருவகையால் பொருந்தும். அத்தகையவர்களுக்கு மனமகிழ்ந்து கொடுத்து ஈகையில் சிறந்து விளங்கினர்.

5. நமது நாட்டில் நீண்டகாலமாக நிகழ்ந்துவரும் பெருங்கொலை என்பது பெரியோர்கள் கூறிய கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அவர்தம் உருவத்துக்கு மட்டும் வந்தனை வழிபாடு செய்வதாகும். இந்த பொய் ஒழுக்கம் நம்நாட்டில் நீண்டகாலமாக வழக்கில் இருந்து வருகிறது.

**உண்மையான வழிபாடு :** 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்!' என்றும் 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்' என்றும் அருளிய பெரியோரை வழிபடும் மக்கள், சாதியையே கடவுளாகவும் சமயமாகவும் கொண்டுள்ளனர். இவர்கள் சாதியை மறுத்துச் சமயத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதில் பொருளே இல்லை. பெரியோரின் வழிநின்று ஒழுகுவதே உண்மையான வழிபாடாகும்.

## II.

6. மக்களால் வாழ்த்தப்படும் பொருள்களுள் ஆவும் ஒன்று. அறுமுறை வாழ்த்து என்னும் தொல்காப்பியப் பகுதி உரையில் (தொல்பொருள் 81ஆம் நூற்பா) "முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும், முடியுடை வேந்தரும், உலகும்" என்னும் அறுவரை வாழ்த்தல் என நச்சினார்க்கினியர் உரைத்தார்.

மக்கள் நல்வாழ்விற்குக் காரணம் ஆவும் ஒன்று என்றே அதைத் தமிழர் வாழ்த்தினர். 'வாழ்க அந்தணர், வானவர் ஆவினம்' என்பது திருஞானசம்பந்தரின் அருளுரையாகும்.

7. நல்ல கவிதையின் நோக்கம் மக்களுக்கு நீதியைக் கூறுவதன்று என்று மேனாட்டு அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர்.

அதற்கேற்ப நம் நாட்டிலும் சிலர் இக்காலத்தில், 'காவியத்தில், இலக்கியத்தில் வருகின்ற கருத்தை நோக்க வேண்டா; இன்பத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கள்' என்கிறார்கள். இது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று.

கவிதை இலக்கியங்கள் சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை போன்று இன்பம் நல்குமென்று எதிர்பார்க்கப்பட வேண்டுவது உண்மைதான்.

ஆனால் கவிதையின் நோக்கம் அதனோடு நில்லாமல் மக்களுடைய வாழ்க்கையைச் சீர்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் ஏற்ற நீதிகளைக் கூறுவதாகவும் இருத்தல் வேண்டும்.

8. **இருவகையான பொருள் :** 'ஆ' என்பது முதலில் மாடு எனப் பொருள் தந்தது. பின்பு பசுவிற்கு வரையறுக்கப்பட்டது. பண்டையுலகம் முழுமையும் மாடே, மக்கள் செல்வமாக இருந்தது. அதனால் செல்வம் மாடென வழங்கப்பட்டது.

**ஐயமுதம் பஞ்சாமிருதம் :** மாடு முல்லை நில மக்களுக்கும் மருத நில மக்களுக்கும் ஊனும் பாலும் உதவியது. இருவகை வேளாண்மைக்கும் உழுது, இறைத்து உதவியது.

மாட்டின் ஊனும் பாலும் மட்டுமல்ல, அதனுடைய தோல், கொம்பு, உரசனை (ரோசனை), வால் மயிர், சாணம் முதலிய பிறவும் பயன்பட்டன.

உணவை விளைவிப்பதும் தானும் உணவளிப்பதும் வேறு பல வகைகளிலும் உதவி செய்வது மாடு. பால் முதல் நெய்யீறாகவுள்ள ஐந்தும் ஐயமுதம் (பஞ்சாமிருதம்) எனப்படும். இவற்றால்தான் பழந்தமிழ் மக்கள் மாட்டைச் செல்வமாகக் கருதினர்.

9. **மக்களின் மனநிலை :** உலகம் படிப்படியே முன்னேறி வருகிறது. அதன் முன்னேற்றத்தை உணராத காரணத்தால் சிலர் முற்போக்கை எதிர்க்கிறார்கள்.

சிலர் உலகம் முன்புபோல் இல்லையே என எண்ணிச் சோர்வு அடைகிறார்கள். சிலர் தாம் விரும்புவதுபோல் இல்லையே என்று உலகைப் பழிக்கிறார்கள்.

**மக்கள் வாழ்வில் மாறுதல்கள் :** உலகம் முன்னேறுகிறது என்றால் மலையும் காடும் ஏதோ மாறுதல் அடைகின்றன என்பதன்று. மக்களின் வாழ்வில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன என்பதாகும்.

**நம்பிக்கை, உறுதி :** இந்த முன்னேற்றத்திற்கு இடையிடையே பல நிலைகளில் மனிதர் தடுமாறியதுண்டு. தடுமாறித் தடுமாறிப் புதிய புதிய அறிவும் ஆக்கமும் பெற்று மனிதர் முன்னேறி வந்திருக்கின்றனர். அந்த முன்னேற்றம்தான் நமக்கெல்லாம் நம்பிக்கையும் உறுதியும் அளித்து வருகிறது என மு.வ. உரைக்கிறார்.

10. **தமிழகக் குடைவரைக் கோவில்கள் :** கோவில் கட்டக்கலை என்று எடுத்துக் கொண்டால் கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்துதான் அறியமுடிகிறது.

தமிழகத்தின் தென்பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி என்னும் ஊரில் உள்ள குடைவரைக் கோவிலே தமிழகத்தில் இன்று காணப்படும் குடைவரைக் கோவில்களுள் பழமையானது ஆகும்.

இது பாண்டியர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

இதனை அடுத்து, தமிழகத்தின் பல பகுதிகளில் குடைவரைக் கோவில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தில் உள்ள குடைவரைக் கோவில்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், அதியர், முத்தரையர் ஆகியோரால் அமைக்கப்பட்டவைகளாகும்.

தமிழகத்தில் கி.பி. 9ஆம் நூற்றாண்டோடு குடைவரைக் கோவில்கள் அமைக்கும் பணி நின்றுவிட்டது.

## III.

11. தொன்று தொட்டுத் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளையுடையதாய் உள்ளது. அம்மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றை இக்கட்டுரையில் அறியலாம்.

**இயற்றமிழ் :** இயற்றமிழ் என்பது, தமிழர் எவரிடத்தும் பொதுவாக இருவகை வழக்குகளில் இயங்கும் உரைநடையும் செய்யுளுமாகிய நூல்களின் தொகுப்பாகும்.

- இதில் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய அனைத்தும் அடங்கும்.
- செந்தமிழ் உரைநடை மற்றும் செய்யுள் நூல்களும், கொடுந்தமிழ் உரைநடை மற்றும் செய்யுள் நூல்களும், இயற்றமிழில் அடங்குமென்பது தானாக விளங்குவதாகும்.

**இசைத்தமிழ் :** இசைத்தமிழ் என்பது, பண்ணொடு கலந்துந் தாளத்தொடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுகளாலும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகிய நூல்களின் தொகுதி.

இதன்கண் கீர்த்தனங்களும் வரிப்பாட்டுகளும், சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியனவும் அடங்கும்.

பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளவகையோத்து, முதலியன முற்காலத்தில் வழங்கிய இசைத்தமிழ் நூல்கள்.

இடைக்காலத்தில் தேவாரமும், இக்காலத்தில் கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை முதலியனவும் இசைத்தமிழாகும்.

நாடகத்தமிழ், என்பது கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய நேரமில்லாப் பணியாளர்களுக்கும் படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. உலகத்தின் இயல்பினை உள்ளதை உள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத்தமிழ் தவிர பிறிதொன்றில்லை. இயற்றமிழும், இசைத்தமிழும் கூடிய வழியே நாடகத் தமிழ் பிறக்கும். நாடகத்தமிழ் கேட்பவர்க்கும் காண்பவர்க்கும் இன்பம் தரும்.

12. மக்கள் நாட்டை ஆள்வதற்குத் தகுதியுடைய ஒருவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினர். அந்த முயற்சியின் விளைவு, தேர்தல் முறையாகும். கையை உயர்த்துவது மூலமாகவும், குடஓலை முறை மூலமாகவும் நம் நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தேர்தல் முறை இருந்து வந்துள்ளது.

அந்தத் தேர்தல்களில், செல்வமும் செல்வாக்கும் மக்களுக்குப் பயன்படுவது மாறி, நாட்டுமக்கள் அனைவரும் ஒரு சிலருடைய செல்வத்தையும் செல்வாக்கையும் காப்பதற்குப் பயன்பட்டனர்.

- செல்வாக்கு, பரம்பரையாய் இருக்கக் கூடாது. புதியவர்கள் தம் திறமையாலும் உழைப்பாலும் செல்வாக்குப் பெற்றுத் தலைமை பெற வேண்டும் எனச் சிலர் சந்தித்தனர். ஒரு வழி பிறந்தது.
- தேர்தல் காலத்தில் ஆள் திரட்டிக் கூட்டத்தைச் சேர்த்தனர். அந்தக் கூட்டத்தின் துணையாலும் உதவியாலும் தேர்தலில் வெற்றிக்கு வழி வகுத்தனர்.
- அதுதான் கட்சி அமைப்பு. கட்சி அமைத்துச் செல்வாக்குப் பெறுவதைக் கண்ட வேறு சிலர் ஒன்று சேர்ந்து வேறொரு கட்சி அமைத்துச் செல்வாக்குப் பெற முயன்றனர்.
- கட்சிகள் கட்சிகளோடு மோதின. மக்களின் நல்வாழ்வுக்காகக் கட்சிகள் கட்சிகளோடு மோதின.
- மக்களின் நல்வாழ்வுக்காகக் கட்சிகள் தோன்றின. ஆனால், அக்கட்சிகளின் வாழ்வுக்காகவே மக்கள் கருவியாகப் பயன்பட வேண்டியதாயிற்று.
- இவ்வாறு காலந்தோறும் தேர்தல் முறைகள் மாறினாலும் அவை மக்களின் வாழ்வுக்குப் பயன்படவில்லை.

இவையே தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகளாகும்.

## IV.

13. **மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து.**

**ஆசிரியர்: வல்லிக்கண்ணன்**

**மூக்கப்பிள்ளை :** மூக்கப்பிள்ளை சிவபுரத்தில் சுகவாசியாய் வாழ்ந்தவர். சமூக ஜீவியாய் அந்த ஊரில் வாழ்ந்தபோதும் சமூகத்தோடு ஒட்டி வாழாமல் விலகியே வாழ்ந்தார். மனைவியை இழந்தவர். வாரிசும் இல்லாதவர். ஊர்ப் பொது விவகாரங்களிலும் உறவினர் வீடுகளுக்கும் செல்ல மாட்டார். ஆனால் திருமணம், இழவு போன்றவற்றிற்குப் பேருக்குத் தலையைக் காட்டி விட்டுத் திரும்புவார். இச்சூழலிலும் யாருக்கும் எந்த தீங்கும் செய்ய மாட்டார். தீங்கு செய்ய நினைக்கவும் மாட்டார்.

**மூக்கப்பிள்ளையின் குணாதிசயம் :** மூக்கப்பிள்ளை கடைகளிலோ, உணவு விடுதிகளிலோ, பிற இடங்களிலோ பொருட்களை வாங்கிக்கொண்டு உரிய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்ற மாட்டார். கடைக்காரர்கள் கவனக்குறைவால் அதிகப் பணம் கொடுத்தாலும் உடனே திருப்பிக் கொடுத்துவிடுவார். நல்லது செய்யவில்லையென்றாலும் கெட்டது செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பார். பிறர் காசு நமக்கெதற்கு என்ற நற்குணம் கொண்டவர் மூக்கப்பிள்ளை.

**ஊர் வழக்கம் :** மூக்கப்பிள்ளை ஊர்க்காரர்களுடன் பழகாமல் ஒதுங்கியே வாழ்வார். ஆனாலும் அவரால் அவ்வாறு கட்டுப்பாடாக இருக்க இயலவில்லை. அவர்களின் ஊர் வழக்கப்படி 'நல்ல மாசத்துப் பழம்', 'மறு வீடு வீட்டுப் பலகாரம்', 'கடலை போடுவது' எனக் கூறிக்கொண்டு பழங்கள், இனிப்பு, காரம் முதலான பலகாரங்களை அவருடைய வீட்டிற்கு கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள். அவர் வேண்டாம் என மறுத்தாலும் அவர்கள் கொண்டு வந்தவற்றை வைத்துவிட்டுச் செல்வார்கள். வேறுவழி இன்றி அவற்றை மூக்கப்பிள்ளை சாப்பிடுவார்.

**மூக்கப்பிள்ளையின் கவலை :** ஊரார் கொடுப்பனவற்றை வேறுவழியின்றி உண்கிறேன். இவற்றை தமக்களித்த ஊரார்க்கும், உறவுகாரர்களுக்கும் இது போல திருப்பிச் செய்யும் வாய்ப்பில்லையே எனக் கவலையுற்றார். மனைவி இருந்திருந்தால் போன வருடம் அறுபது வயது நிறைந்ததற்காகச் சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடி இருக்கலாம், அனைவரையும் அழைத்து விருந்து வைத்திருக்கலாம், இப்படி எதற்கும் வழியில்லாமல் போயிற்றே எனப் பலவாறு எண்ணி வருத்தப்பட்டார்.

**செய்தித்தாளில் கண்ட செய்தி :** ஒரு நாள் மூக்கப்பிள்ளை செய்தித்தாளில் ஒரு செய்தியைப் பார்த்தார். "வடக்கே ஒருவனும், தெற்கே ஒருவனும் எப்போதோ இரயிலில் பயணம் செய்த போது பயணச்சீட்டு வாங்காமல் விட்டுவிட்டான். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு மனசாட்சி உறுத்தியதால், பயணச்சீட்டுப் பணத்தை வட்டியுடன் இரயில்வே துறைக்குச் செலுத்தியிருந்தனர்". இச்செய்தியைப் படித்த மூக்கப்பிள்ளை தெளிவு பெற்றவராய் ஒரு முடிவு செய்தார். என்னவெனில் ஊர் மக்களை விருந்துக்கு அழைத்து விருந்திட்டு அவர் பட்ட கடனைத் தீர்க்க எண்ணினார்.

**விருந்துக்கு ஏற்பாடு :** நீண்ட யோசனைக்குப் பிறகு, ஊர் மக்களுக்கு விருந்தளிக்க, சித்திரா பௌர்ணமி நாளைத் தேர்ந்தெடுத்தார். விருந்துக்கான ஏற்பாடுகளைச் செய்தார். சமையல் கலையில் தேர்ச்சி பெற்ற தவசிப் பிள்ளையையும் வேலையாட்களையும் வரவழைத்துத் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்தார்.

**ஊரார் அவமதித்தல் :** சித்திரா பௌர்ணமியன்று காலையிலேயே அழைப்புக்கார ஆறுமுகத்தை அழைத்து, ஊர்மக்களிடம் சித்திரா பௌர்ணமி சித்தரான்னச் சிறப்பு விருந்துக்கு வருமாறு அழைக்கச் சொன்னார். சித்திரா பௌர்ணமி இரவன்று வீட்டில் விளக்குகளை ஏற்றி வைத்துக் கொண்டு, உணவு பரிமாறத் தயாராய் இருந்தார். இரவு 9 மணி வரை ஊர்மக்கள் எவரும் வரவில்லை. மீண்டும் அழைப்புக்கார ஆறுமுகத்தை அனுப்பி வீடு வீடாக அழைக்கச் சொன்னார். மூக்கப்பிள்ளை ஊர்மக்களைத் தனித்தனியாக அழைக்கவில்லையென்பதால் அனைவரும் ஒன்றுகூடி விருந்திற்கு வருவதை தவிர்த்தனர். மூக்கப்பிள்ளை ஊர்மக்கள் வரவில்லை என்று வருந்தவில்லை. செய்து வைத்த பலகாரங்களும் உணவும் வீணாகுமே எனத்தான் வருந்தினார்.

**மூக்கப்பிள்ளை செய்த தீர்வு :** மூக்கப்பிள்ளை ஆறுமுகத்தை அழைத்து "இந்த ஊர்ப் பெரியவர்கள் வரவில்லையென்றால் என்ன? நீ வடக்கூருக்கும் கீழூருக்கும் சென்று, அங்கு வாழ்கின்ற ஏழை எளியோர்களை அழைத்து வா! அவர்கள் வருடத்தில் ஒரு நாளாவது வயிறார உண்ணட்டும், நீங்களும் திருப்தியாகச் சாப்பிடுங்கள்" என்றார்.

**முடிவுரை :** ஊர் வழக்கங்களை விட மனித நேயம் உயர்ந்தது. பசித்திருப்பவர்க்கு உணவளிப்பதே அனைத்திலும் மேலானது, புனிதமானது என்னும் உண்மையைச் செயல் மூலம் காட்டினார் மூக்கப்பிள்ளை. இருக்கிற சுகவாசிகளுக்கு மேலும் மேலும் விருந்தளிப்பதைவிட ஏழை, எளியோர்களின் வயிற்றுக்குச் சோறு போடுவது ரொம்பப் பெரிய விஷயமாகும் என்ற பொன்மொழியைத் தீட்டிக் கொண்டது மூக்கப்பிள்ளையின் மனம்.

**(அல்லது)**

13. **மகன்**

**ஆசிரியர்: பா.செயப்பிரகாசம்**

**முன்னுரை :**

பெற்று வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கிய பெற்றோரை அவர்களின் முதுமைக் காலத்தில் பாதுகாக்காமல் வீட்டை விட்டு வெளியேற்றும் புதல்வர்கள் மலிந்து விட்டார்கள். இதனால் மாவட்டந்தோறும் 'முதியோர் இல்லங்கள்' தோன்றிய வண்ணம் உள்ளன. விரட்டப்பட்டதால் அன்னகாமு தன் கணவனை அழைத்துக்கொண்டு தன் ஊரான பண்ணைப்புரத்திற்கு அழைத்து வந்து ஓராண்டாயிற்று. அவள் இறந்தபோது நடந்த அவலங்களை பா.செயப்பிரகாசம் விவரிக்கிறார்.

**பண்ணைப்புரம் :**

பண்ணைப்புரத்தின் தெற்கு எல்லையில் ஒரு பெரிய புளிய மரம். அந்த மரத்தைச் சுற்றி மேடை அமைத்திருந்தார்கள். தன்னை நட்ட நடுவாய்ப் பிளந்துகொண்டு பல ஊர் பஸ்களும் லாரிகளும் கார்களும் ஓடும் வகையில் அமைந்தது அந்தச் சிறு நகரம்.

**அன்னகாமுவின் மகன் :**

தன் தாய் இறந்துவிட்ட செய்தி கேட்டு மகன், தன் சொந்த ஊரிலிருந்து ஆட்களை வேன் நிறையக் கூட்டி வந்திருந்தான். அவன் நிலப்பிரபுபோல் தோற்றமளித்தான். பண்ணைப்புரத்தார்கள் புளிய மரத்து மேடை அருகே அவனை மறித்து நிறுத்திவிட்டார்கள். "வந்தது வந்துவிட்டீர்கள்! போய் அழவேண்டியவர்கள் அழுங்கள். ஆனால் அந்த அம்மாவை ஊருக்கு எடுத்துப் போவது மட்டும் வேண்டா," என்றார்கள் பண்ணைப்புர ஆள்கள் கண்டிப்பாக.

**அன்னகாமு :**

அன்னகாமுவை நாற்காலியில் சாத்தி வைத்திருந்தார்கள். அம்மா பிறந்த ஊர் பிள்ளைகளுக்குச் சொந்த ஊராய்க் கருதப்படுவதில்லை. எனவே, மகன், இறந்த தாயைத் தன் ஊருக்குக் கொண்டு செல்ல விரும்பினான். விரட்டியடிக்கப்பட்ட அப்பனுக்கும் ஆத்தாவுக்கும் மூத்த மருமகன் என்ற பெயரில் வருகிறவர்களை எல்லாம் அண்டக் கொடுத்து ஆதரிக்கும் நிழல் பண்ணைப்புரத்தில் அவர்களுக்குக் கிட்டியது.

**தந்தையின் மனநிலை :**

"எந்தெந்த ஊருக்குச் செய்தி அனுப்பினீர்கள்?" என்று உறவினர் கேட்ட போது, "மூத்த மாப்பிள்ளை எல்லா ஊருக்கும் ஃபோன் போட்டுச் சொல்லிவிட்டார்" என்றார், அன்னகாமுவின் கணவன். உடனே, "கடைசியில் சொந்த ஊரை விட்டுட்டீராக்கும்? பெத்த மகனுக்கு ஒரு வார்த்தை... சொல்லத் தோணவில்லை!" என்றான் சின்னராசு.

படீரென்று கொதித்த அன்னகாமுவின் கணவன், "சொந்த ஊர் எனக்கு இல்லையே!" என்றார்.

"அப்போ... மகன்?"

"மகனா? அவனை அன்றைக்கே தலைமுழுகியாச்சே" என்றார் கொதிப்புடன்.

**குளிப்பாட்டல் :**

குளிப்பாட்டுவதற்கு முன் அன்னகாமு தலைக்கு எண்ணெய்யும் சிகைக்காயும் வைக்கிற சடங்கு நடந்து கொண்டிருந்தது. வயதான பெரியம்மா, ஒவ்வொருவர் கையிலும் சிகைக்காய்க் குழம்பை எடுத்துக் கொடுத்தாள். முதலில் கணவன், பிறகு மருமகன்கள் என ஒவ்வொருவராய் வந்தனர். அப்போது பூனைபோல மெல்ல நகர்ந்து வந்த மகன், எண்ணெய்க்குக் கை நீட்டினான். அந்தப் பெரியம்மாவின் கையும் மேலே உயர்ந்து தாழ்ந்தது. பக்கத்தில் இருந்த மூத்த மகள் மல்லிகா, சட்டென்று அவன் கையைத் தட்டிவிட்டாள். எண்ணெய்யும் சிகைக்காயும் அவன் முகத்தில் பட்டுத் தெறித்தன. மகன் அழைத்து வந்தவர்களுள் ஒரிருவர் அவனுக்காகப் பரிந்து பேசினார்கள். அவன் தந்தை, சடலத்திற்கு முன் சாமியாடியபடி நின்றார். ஆங்காரம் கொண்ட பெண்கள் அவனை மறித்து நின்றார்கள். மூத்த மகள் மல்லிகா எண்ணெய்ப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

**சுடுகாட்டில் :**

சுடுகாட்டில் அன்னகாமுவைப் பூமாதேவியைப் பார்த்தபடி குப்புறப் படுக்க வைத்தார்கள்.

"அவனைக் கொஞ்சம் விடுங்க. அவன் கொள்ளி வைக்கட்டும்" என்று கூட்டத்தில் யாரோ சொன்னார்கள். "மகன் கொள்ளிக்குடம் எடுத்தால், குடம் கொத்த மாட்டோம், யாருக்கு விருப்பமோ கொத்திக் கொள்ளுங்கள்" என்று மருமகன்கள் அரிவாள் வாங்க மறுத்தார்கள். அன்னகாமு மகன், அதற்கும் தயாராய் மாமன்முறை வேண்டிய ஒருவனை ஏற்பாடு செய்து அழைத்து வந்திருந்தான்.

மல்லிகா, முன்னால் வந்து, "யாரும் வைக்கக்கூடாது. எங்கள் அம்மாவுக்கு நான்தான் வைப்பேன்" என்று கொள்ளிக்குடத்தை எடுத்து வலத்தோளில் வைத்துக் கொண்டாள்; அன்னகாமுவை மூன்று முறை சுற்றி வந்தாள். மூத்த மருமகன் குடத்தைக் கொத்தினான். துளை வழியாய்த் தாரை பீறிட்டு மண்ணை நனைத்தது. அன்னகாமுவின் தலைமாட்டில் குடத்தைப் போட்டு உடைத்தாள் மல்லிகா. "திரும்பிப் பார்க்காமல் போ" என்ற பெரியம்மா அவளை அழைத்துச் சென்றாள்.

**(அல்லது)**

**13. வேலி**

**ஆசிரியர்: ராஜம் கிருஷ்ணன்**

**காட்சி–1**

(இந்த நிகழ்ச்சியில் பங்கேற்போர் மாலதி, மாமியார் கோமதி, தமக்கை ருக்குமணி, அத்தான் செல்லப்பன்)

**ருக்குமணி** : மாலு .......... !

**மாலதி** : வா அக்கா! அத்தானும் வந்திருக்கிறார்களா? வாருங்கள். (குழந்தையைப் பார்த்து) அட! போக்கிரி ராஜு!

**ருக்குமணி** : நீதான் அரும்பாக்கம் பஸ்ஸையே மறந்து விட்டாய்! எங்களால் மறக்க முடியவில்லை! ஆமாம். இது எத்தனையாவது மாதம்?

**மாலதி** : என்ன அத்தான் நிற்கிறீர்கள்? உட்காருங்கள் (குழந்தையைத் தூக்கிக் கொண்டு) இந்தப் பையன் என்னை மறந்து விட்டான். என்னமா விழிக்கிறான், பாருங்கள். (அப்போது மாமியார் கோமதி வருகிறாள்)

**ருக்கு** : நலமா, அம்மா? மாதமாய் இருக்கிறாள் என்று கேள்விப்பட்டு வந்தோம்.

**கோமதி** : (போலிச்சிரிப்புடன்) வாருங்கள்!

**ருக்கு** : அம்மாவின் உடம்பு சரியாய் இல்லை. மாலு..... மாலு..... என்று எந்நேரமும் புலம்புகிறார்கள். அதுவும் முழுகாமல் இருக்கிறாள் என்று தவிக்கிறார்கள்.

**கோமதி** : அவர்களையும் அழைத்து வந்திருக்கலாமே! அவளுக்கு உடம்பு நன்றாய் இல்லை. பஸ்ஸிலே அவ்வளவு தூரம் அலைக்கழிக்கப் பயமாய் இருக்கிறதே! மகன் இருந்திருந்தால் இவள் ஆபிஸ் போவதற்கு சம்மதித்திருக்க மாட்டான். அவளும் வீட்டில் கொட்டு கொட்டென்று தனியே இருப்பாள் என்று தான் போய் வர அனுமதித்தேன். நான் இவளை மாடியை விட்டு கீழே இறங்க விடுவதில்லை. அப்படி இருக்கும்போது இவள் பதினைந்து கல் பஸ்ஸில் அலையலாமா?

**ருக்கு** : பூ முடிப்பு ..... வளைகாப்பு என்று ..... நீங்கள் செய்வதென்றால் ..... அம்மா உங்களைக் கேட்டுவிட்டு வரச் சொன்னார்கள்.

**கோமதி** : எல்லாம் செய்வது வழக்கந்தானே! பிறந்த வீட்டில் பொன் வளையல், சேலை எல்லாம் வாங்குவது உண்டே!

**ருக்கு** : கலியாணந்தான் எப்படியோ ஆகிவிட்டது! அவள் மனதும் இந்த நாளில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உங்களைக் கேட்டு வரும்படி அம்மா சொன்னார். என்ன உண்டோ நாங்கள் பணம் தருகிறோம். நீங்கள் ..... ஒரு நாளை குறித்துச் செய்து கொள்ளுங்கள்.

**கோமதி** : அதற்கென்ன? செய்துவிட்டால் போயிற்று. பார்க்க வேண்டுமென்றால் உங்கள் அம்மாவையும் கூட்டிக் கொண்டு வா ..... (அப்போது கோமதியின் மகள் பங்கஜம் இரண்டு தம்ளரில் காப்பி கொண்டு வந்து செல்லப்பனுக்கும் ருக்மணிக்கும் கொடுக்கிறாள்.)

**ருக்கு** : இப்போது ..... என்னத்திற்கு காப்பி .....? வளையல் எப்படிச் செய்ய வேண்டுமோ? நீங்கள் செய்து கொள்வதானால் ..... பணம் தருகிறேன். ஏனம்மா மாலு?

**மாலு** : இந்தச் சம்பிரதாயமெல்லாம் எதற்கு அக்கா?

**கோமதி** : (கண்டிப்பான குரலில்) வழக்கத்தை ஏன் குறைக்க வேண்டும்? அவர்கள் சொல்வதைப் போலக் கலியாணந்தான் ஒன்றுமில்லாமல் நடந்து விட்டது! பிறக்கும் குழந்தை நல்ல விதமாக பிறக்க வேண்டாமா? (ருக்குமணி செல்லப்பனைப் பார்க்க அவர் குறிப்பறிந்து இரண்டு நூறு ருபாய் தாள்களைப் பையிலிருந்து எடுத்து ருக்மணியிடம் கொடுக்கிறார்)

**ருக்கு** : இந்தாருங்கள், அம்மா! (பயபக்தியுடன் அந்த இரு நூறு ரூபாய் தாள்களைக் கோமதியிடம் கொடுக்கிறாள்).

**கோமதி** : (அதனை அலட்சியமாய் நான்காய் மடித்து இடுப்பில் சொருகிக் கொண்டு) ஏதோ சவரன் எண்பது ரூபாய் என்று விற்கிறது. பார்க்கலாம். காப்பியைக் குடியேன். (ருக்குமணி பாதி காபியைக் குழந்தைக்குப் புகட்டிவிட்டு பாதியைத் தான் குடித்துவிட்டுத் தம்ளரைக் கழுவ எழுகிறாள்)

**மாலதி** : (எரிச்சலுடன்) இருக்கட்டும், அக்கா நீ கழுவ வேண்டா.

**ருக்கு** : பரவாயில்லை மாலு ......! (மாலதி தம்ளரைப் பறித்துக் கீழே வைக்கிறாள். செல்லப்பனும் ருக்குமணியும் கும்பிடு போட்டுவிட்டு விடை பெறுகின்றனர்)

**(அல்லது)**

**13. பால்வண்ணம் பிள்ளை**

**ஆசிரியர்: புதுமைப் பித்தன்**

**காட்சி – 1**

**இடம்** : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

**காலம்** : பிற்பகல்

**உறுப்பினர்கள்** : பால் வண்ணம் பிள்ளை, உடன் பணியாற்றும் நண்பர்கள்

**பால் வண்ணம் பிள்ளை** : என்ன நண்பரே! அமைதியாக வேலை செய்கிறீர்கள்? பேசிக்கொண்டே செய்தால் வேலைப் பளுவும் தெரியாது. நேரமும் கழியும். நம் பொது அறிவும் வளரும்.

**நண்பர்** : எதைப் பற்றி பேசுவது? அது மட்டுமின்றிப் பேசிக்கொண்டே வேலை செய்தால் வேலையைச் சரியாகச் செய்ய இயலாது.

**பால்வண்ணம்பிள்ளை** : நீங்கள் எண்ணுவது தவறு.

**நண்பர்** : சரி! நீங்களே ஆரம்பியுங்கள்.

**பால்வண்ணம்பிள்ளை** : இன்று செய்தித்தாளில் தென் அமெரிக்காவில் உள்ள மெக்ஸிகோவைப் பற்றிப் படித்தேன்.

**நண்பர்** : என்ன! மெக்ஸிகோ தென் அமெரிக்காவில் உள்ளதா?

**பால்வண்ணம்பிள்ளை** : ஆமாம். அதிலென்ன சந்தேகம்?

**நண்பர்** : புவியியலில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லையே! வட அமெரிக்காவில் இருப்பதாய்ப் படித்த ஞாபகம்.

**பால்வண்ணம்பிள்ளை** : எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. தென் அமெரிக்காவில்தான் மெக்ஸிகோ உள்ளது. நாளைக்கு நான் புவியியல் நூல் கொண்டு வந்து மெய்ப்பிக்கிறேன்.

**காட்சி – 2**

| | | |
|---|---|---|
| **இடம்** | : | பால்வண்ணம்பிள்ளை வீடு. |
| **காலம்** | : | மாலை. |
| **உறுப்பினர்கள்** | : | பால் வண்ணம் பிள்ளை, மனைவி (பால்வண்ணம்பிள்ளை புவியியல் நூலை எடுத்து ஐயத்தைத் தீர்த்துக்கொள்ள வீட்டிற்குள் வேகமாக நுழைகிறார்.) |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | ஏண்டி! அரங்குச் சாவி எங்கே? (கேள்வியைக் கேட்டுக்கொண்டே அலமாரியை ஆராய்கிறார்) |
| **மனைவி** | : | (கையில் சாவியை ஏந்தியவாறு வருகிறாள்) என்ன தேடுறீங்க? |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | ஒரு புத்தகம். சாவி எங்கே? |
| **மனைவி** | : | இந்தாருங்க. ஓங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்! குழந்தைக்குப் பால் செலவு அதிகமா இருக்கே! ஒரு மாட்டை வாங்கினா நல்லாயிருக்கும். |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | (புத்தகத்தில் மெக்ஸிகோ வட அமெரிக்காவில் இருப்பதைக் கண்டு அதிர்ந்தார். தன்கூற்று பொய்யாகிவிட்டதே என்ற கோபத்தில்) மாடெல்லாம் வாங்க முடியாது. எம்புள்ளைங்க நீராகாரம் குடித்தே வளரட்டும். |

**காட்சி –3**

| | | |
|---|---|---|
| **இடம்** | : | பால்வண்ணம்பிள்ளை வீடு. |
| **காலம்** | : | மாலை. |
| **உறுப்பினர்கள்** | : | பால்வண்ணம்பிள்ளை, மனைவி |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | (அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்த பால்வண்ணம்பிள்ளை, புறவாயிலில் பசுவையும், கன்றையும் பார்த்து) ஏண்டி! இந்த பசுவும் கன்றும் எப்போது வந்தது? யார் வாங்கிக் கொடுத்தா? |
| **மனைவி** | : | மேல வீட்டு அண்ணாச்சி வாங்கிக் கொடுத்தாங்க. என் கைக்காப்புகளை விற்று வாங்கினேன். ஒரு படி பால் கறக்குமாம். மேல் வருமானமும் வருமாம். (என்று கூறியபடி காப்பியைக் கொடுக்கிறாள்) |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | இனிமேல் எனக்குக் காப்பி, பால், மோர் எதுவும் வேணாம். (மனைவி மிகவும் வருந்தினாள்) |

**காட்சி –4**

| | | |
|---|---|---|
| **இடம்** | : | பால்வண்ணம்பிள்ளை வீடு |
| **காலம்** | : | 8 மணி |
| **உறுப்பினர்கள்** | : | பால்வண்ணம்பிள்ளை, மனைவி, குழந்தைகள், சுப்புக்கோனார். |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | (பதினைந்து நாட்களுக்குப் பிறகு சுப்புக் கோனாரை அழைத்துக் கொண்டு வந்தார்) மாட்டைப் பாரும், இருபத்தைந்து ரூபாய்தான்... |
| **சுப்புக்கோனார்** | : | சாமி! மாடு அறுபது ரூபா பெறுமே? |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | இருபத்தைந்துதான். உனக்காக முப்பது ரூபாய். ஆனால் இப்பொழுதே பிடித்துக் கொண்டு போய் விடு. |
| **சு. கோனார்** | : | சாமி! இந்த ராத்திரியிலா, நாளை விடியலில் பிடித்துக் கொண்டு போகிறேன்... (மனைவி மிகவும் வருந்தினாள்) |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | உம். இப்பவே (கோனார் மாட்டை அவிழ்க்கின்றார்) |
| **மனைவி** | : | (தயங்கியபடி) ஏனுங்க! மாடு எழுபது ரூபாய் ஆயிற்றே. குழந்தைகளுக்காகத்தான் வாங்கினேன். |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | என் பிள்ளைகள் நீத்தண்ணி குடிச்சி வளர்ந்து விடுவார்கள். |
| **மூத்தமகன்** | : | (கோனார் மாட்டை அவிழ்த்துச் செல்வதைப் பார்த்து அழுதுகொண்டே) அம்மா! என் கண்ணுக்குட்டி. |
| **பால்வண்ணம்பிள்ளை** | : | சும்மா கெட சவமே! |

14. **மண்**

**ஆசிரியர்: அய்க்கண்**

'மண்' என்ற சிறுகதையில் என் மனம் கவர்ந்த கதைமாந்தர் கோவிராஜ்.

**நன்மக்களுள் ஒருவர் :**

பொது நலச் சிந்தனை, தொண்டுள்ளம், மனித நேயம் ஆகிய பண்புகள் வழி நன்மக்களால்தான் உலகம் அதிக நன்மைகளைப் பெறுகின்றது. இவ்வகையான நன்மக்களுள் ஒருவர்தான் கோவிராஜ்.

**சிறந்த குணவாளர் :**

கோவிராஜ் மிகுந்த மனிதநேயம் உடையவர். அவர் 'ஸேவா' தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர். பெண்சிசுக் கொலையின் கொடுமையை அவ்வப்போது சூரப்பட்டி போன்ற கிராமங்களுக்குச் சென்று மிக உருக்கமாகப் பேசும் குணம் கொண்டவர். 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழிக்கேற்பத் தொடர்ந்து முயற்சி செய்து கிராம மக்களின் மனதை மாற்றும் திறன் படைத்தவர்.

**மன உறுதி :**

சூரப்பட்டி கிராமத்தில் பெண்சிசுக் கொலை அதிகமான முறையில் நடந்து கொண்டிருந்தது. அக்கிராமத்தில் இராமாயி என்ற பெண், தன் இரண்டு பெண் குழந்தைகளையும், ஊர் மக்களிடம் அழுது புலம்பிக் கெஞ்சிக் கண்ணீர் சிந்தி, மன உறுதியுடன் கள்ளிப்பால் கொடுக்காமல் காப்பாற்றினாள். இதற்கு உறுதுணையாக கோவிராஜ் இருந்தார். இவர் பல மணிநேரம் ஊர் மக்களிடம் பேசி அவர்களின் மனநிலையை மாற்றுபவர்களிடையே மாறுபட்டவர். ஏனெனில் கோவிராஜ் சொல்லைச் சுருக்கிச் செயலைப் பெருக்குபவர் ; செயல் மூலம் சொல்லுக்கும் விளக்கம் தருபவர்; தன்னலமற்ற தொண்டுள்ளம் கொண்டவர்.

**உதவும் பண்பு :**

கோவிராஜின் தொண்டு நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் வந்து நிதியுதவி செய்யும் இங்கிலாந்து நாட்டுத் தம்பதிகள் ரிச்சர்டும் லிஸியும் குழந்தைப் பேறு இல்லாதவர்கள். ஆகையால் ஓர் ஏழைக் குழந்தையை தத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோவிராஜனிடம் தெரிவித்திருந்தார்கள். இராமாயி – கருப்பையா தம்பதியினர், இதற்கு விருப்பம் தெரிவித்தனர். எனவே கோவிராஜ் சட்டப்படி செய்ய வேண்டியனவற்றைச் செய்தார்.

**ஊர் மக்களிடம் எதிர்ப்பு :**
குழந்தையைப் பெற்றெடுத்த இராமாயி – கருப்பையா சம்மதம் தெரிவித்தனர். ஆனால் அக்கிராம மக்கள் " நம்ம புள்ளைய வெள்ளைக்காரங்க, தத்து எடுக்கிறார்களா?" "கருப்பு நிறம்னாலே வெள்ளைக்காரர்களுக்குப் பிடிக்காதுன்னு அய்யா சொல்லுவாங்களே?" இவ்வாறு பல கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். "நம் பொண்ணு கஷ்டப்படக் கூடாதுன்னுதான், கள்ளிப்பால் கொடுத்துச் சாகடிக்கிறோம். இவங்க தூக்கிக் கொண்டு போய் கஷ்டப்படுத்தினா யாரு கேக்கிறது?" என்றார் ஒருவர். "நம்ம வீட்டிலே பொறந்த புள்ளையை நாம வளக்கணும். இல்லேண்ணா நாமே கொன்னு புதைச்சிடணும்" என்று ஆவேசத்துடன் மக்கள் எதிர்த்தனர்.

**கோவிராஜின் துணிவு :**
கோவிராஜ் கிராம மக்களின் பேச்சுக்கெல்லாம் செவிசாய்க்கவில்லை. பிள்ளையின் தாய் தந்தை சம்மதமும் உறுதியும் இருந்தால் போதும் என்று எண்ணி செயல்பட்டார். உயர் பண்பும் தொண்டுள்ளமும் கொண்டோரிடமே கொடுக்கின்றோம் எனத் திருப்தி பெற்றார் கோவிராஜ். குழந்தையை கொடுப்போருக்கும் பெறுவோருக்கும் இடையே அன்புப் பாலமாகச் செயலாற்றினார் கோவிராஜ்.

**முடிவுரை :**
கோவிராஜ் போன்ற பண்புடையவர்களால் தான் உலகம் அழியாமல் இருக்கின்றது. 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற குறளுக்கு கோவிராஜின் வாழ்க்கை பொருத்தமானதாக உள்ளது.

**(அல்லது)**

14. **ஒவ்வொரு கல்லாய் ...**
**ஆசிரியர்: கந்தர்வன்**
**கதை நாயகன் மனைவி :** கதை நாயகன் மனைவியே எனக்கு மனங்கவர்ந்த கதைமாந்தர். ஏனெனில் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்பது பழமொழி. மனையாள் என்றும் இல்லாள் என்றும் பெண்ணுக்குப் பெயரே தவிர ஆணுக்கு "இல்லான்" என்று பேர் வைத்தால் இல்லாதவன் ஆகிவிடுகிறான் இல்லையா? இப்பெண்ணின் பெயரைச் செல்வி என்று அழைப்போமே!
செல்வி ஒரு இடைப்பட்ட குடும்பத்திலே பிறந்த பெண். அதிலிருந்து தனக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக் கொண்டதால், கணவன் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்யும் நல்ல பெண்ணாக – குடும்பத் தலைவியாக விளங்கினாள். பொறுமையும் திறமையும் அவளது இரு கண்கள்.
ஒண்டிக் குடித்தனம் வேண்டாம் என அவள் முடிவெடுத்ததற்குக் காரணம், பிள்ளை வளர்ந்த நிலையில் பிரச்சனைகள் நிறைந்த ஒண்டிக் குடித்தனத்தை விட்டொழிக்க முடிவு செய்தாளே தவிர ஆடம்பரம் பண்ண அவள் அவ்வாறு முடிவெடுக்கவில்லை. குளியலறைச் சண்டைகள் குழாயடிச் சண்டைகள் இல்லாமல் வாழ ஒண்டிக் குடித்தனத்தை வெறுத்தாள்.
பிறகு கணவனிடம் கலந்தாலோசித்து ஓரமாக வயலில் கட்டப்பட்ட பல அறைகள் நிறைந்த வீட்டை வாடகைக்கு எடுத்தனர். குழாய்ச் சட்டைக்காரர் ரூ. 300க்கு வீட்டை வாடகைக்கு விட ஒப்புக் கொண்டார். ரூ. 3000 என முன் தொகையும் கொடுக்கப்பட்டது. குமார் இல்லம் என்று பெயர் சூட்டப்பட்ட அந்த வீட்டில் மொட்டை மாடி, மைதானம் மாதிரி, அடுப்படி கடல் மாதிரி பெரியது. அதிலே தன் கணவருக்கும் பிள்ளைக்கும் மகிழ்வை அளித்தாள்.
வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்னும் நிலை உருவானது. அப்போது செல்வி சிறப்பான முடிவெடுத்தாள். அந்தச் சூழலிலே கணவனை மனை வாங்கச் செய்தாள். மாடி வீடுகட்டினாள். கை கால்களில் கிடந்த நகைகளைக் கழற்றி விற்றாள்; கணவனிடம் கொடுத்தாள். அந்தக் கடன் இந்தக் கடன் வாங்கி வீடு கட்டியாயிற்று. ஆர்வத்தால் வீடு கட்டி முடித்தாலும் கடன் வட்டித் தொல்லைகள் வரிசையாய் நின்றன. ரூ. 500 வரை வாடகைக்கு விட்டு விட்டு இங்கேயே, வாடகை வீட்டிலேயே குடியிருப்போம். ரூ. 200 நமக்கு மிச்சம் எனக் கணக்குப் போட்டுக் கணவனுக்குச் சொன்னாள் செல்வி.
நிதி அமைச்சராய், குடும்பத்தின் மதி அமைச்சராய் விளங்கிய செல்வியால் பண நெருக்கடி தீர்ந்தது. குடியிருந்த வீட்டுக்காரர் ரூ. 50ஐக் கூட்டினாலும் கொடுப்பது, ரூ. 150ஐ மிச்சம் செய்வது, என முடிவெடுக்க செல்வியின் முடிவு சிறந்தது.

**(அல்லது)**

14. **நேர்மை தவறாத மாணிக்கம், அந்த பண்பில் தவறாது வாழ்க்கையில் பாடுபட்டு உயர்ந்த கதை :**
**நேர்மைக்குப் பரிசு**
**முன்னுரை :**
மாணிக்கத்துடன் அவனது தந்தை உணவகத்துக்குச் சென்றார். ஆளுக்கு நாலு தோசை, இரண்டு ரசவடை, தேநீர் என இருவரும் உண்ட கணக்கு இரண்டு ரூபாய் தொண்ணூறு பைசா என்பதை மாணிக்கம் கணக்கிட்டான். பிறகு அவனது தந்தை பணம் வாங்கிப்போடும் மேசை அருகில், கூட்டம் அதிகமாக மோதும் நேரத்தில், பணம் செலுத்துவதற்காகச் சென்றார். ஐம்பது பைசா பணத்தை எடுத்து மேசை மேல் வைத்தார். ஏறிட்டுப் பார்த்த கடைக்காரரிடம் "ரெண்டு தேநீர்" என்று பொய்க் கணக்குச் சொல்லிவிட்டு மாணிக்கத்தை அழைத்துக் கொண்டு வேகமாக வெளியே வந்தார்.

**தீர்மானம் :**
இச்செயல் மாணிக்கத்திற்குப் பிடிக்கவில்லை. இனிமேல் அப்பாவுடன் எங்கும் செல்லக்கூடாது என்றும், அப்பாவைப் போல் தவறு செய்யக்கூடாது என்றும் முடிவு செய்தான். அன்றிலிருந்து அவன் நேர்மையாய் நடந்து கொண்டான். தினமும், காலையில் வீடு வீடாகச் சென்று செய்தித்தாள் போடுவது, பள்ளிக்குச் செல்வது, மாலை நேரங்களில் படிப்பது என்ற முறையைக் கடைபிடித்தான். கடுமையாக உழைத்தான். படிப்பிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவனாகத் திகழ்ந்தான்.

**உதவி :**
ஒரு முறை அவன் சாலையில் சென்று கொண்டிருந்தபோது சாலையோரமாக ஒரு மகிழ்வுந்து நின்று கொண்டிருந்தது. அதில் வண்டியை ஓட்டி வந்தவர் மட்டும்தான் இருந்தார்; அதுவும் மயங்கிய நிலையில். என்ன செய்வதென்று தெரியாமல் சிந்தித்தான். பிறகு காரைத் திறந்து அவரை எழுப்பிப் பார்த்தான். சிறிது தண்ணீர் எடுத்து முகத்தில் தெளித்துப் பார்த்தான். அதன் பிறகு அவர் முணங்கியபடி எழுந்திருந்தார்.
பிறகு அவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அவருடைய உறவினர்களுக்குத் தகவல் கூறினான். காரில் வந்தவர் ஒரு நகைக்கடை முதலாளி. அவர் புதிய நகைகளை வாங்கிக் கொண்டு வரும் போதுதான் வழியில் மயங்கிக் கிடந்தார். அவர் வந்த காரில் நிறைய பணமும் நகைகளும் இருந்தன. மாணிக்கம் நினைத்திருந்தால் நகைகளையும், பணத்தையும் எடுத்துச் சென்றிருக்கலாம். ஆனால் அவற்றைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.
நகைக்கடை முதலாளியின் உறவினர்கள் வந்தவுடன் கார் சாவியைக் கொடுத்துவிட்டு நகைகளையும் பணத்தையும் ஒப்படைத்து விட்டுச் சென்றான். உறவினர்கள் அவனைப் பாராட்டி அனுப்பி வைத்தனர்.

**வேலை கிடைத்தது :**
மருத்துவமனையில் இருந்து முதலாளி வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாக மாணிக்கத்தை அழைத்து, அவனைப் பற்றி விசாரித்தப் பிறகு, நகைக்கடையில் வேலையும் கொடுத்தார். மாணிக்கத்தின் கண்களில் ஆனந்தக்

கண்ணீர்! ஏனெனில் மாணிக்கத்தின் தந்தையைப் பற்றி அனைவரும் அறிந்திருந்ததலால், மாணிக்கத்திற்கு வேலை கொடுக்க யாரும் தயாராய் இல்லை. அந்த நேரத்தில் தான் அவனுக்கு நகைக்கடை முதலாளியைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவனுடைய நேர்மையை எண்ணி முதலாளி மாணிக்கத்திற்கு வேலை கொடுத்துள்ளார்.

**முடிவுரை :**
இது மாணிக்கத்தின் நேர்மைக்கு கிடைத்த பரிசு. நேர்மை மனிதரை சிறப்பாக வாழவைக்கும்.

**(அல்லது)**

14. **தமையன் செய்த உதவிகள்**

**முன்னுரை :**
கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து நினைவலைகளில் விழுந்து நீச்சலடித்தான். இராமு, கிட்டுவின் பெரியப்பா பையன். பணம் பணம் என்று பேராசை கொண்ட பெரியப்பாவின் பிள்ளைகள் ஊரில் செல்வாக்கு மிக்கவர்கள். பணக் கனவில் மிதந்து ஏழைகளை ஏமாற்றி ஊரார் சொத்துக்களை சேர்த்து கொண்டவர்கள் என்று கிட்டுவின் அண்ணன் ஒருமுறை கூறியிருந்தார். ஆனாலும், கிட்டு, ராமுவுடனான நட்பை, உறவைத் தொடர்ந்தான். ஒரு நாள் தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்துப்பார்த்தான் கிட்டு.

நான் ஒரு வயது குழந்தையாயிருக்கும் போதே தந்தை இறந்துவிட்டார். பிறகு பத்தாவது வயது வரை என்னையும், என் அண்ணனையும் அம்மா வளர்த்தார். அவரது மறைவுக்குப்பின், என் அண்ணண் தான் என்னை முழு பொறுப்புடன் வளர்த்தார்.

**அண்ணனின் உழைப்பு :**
நான் படிக்க வேண்டும் என்பதற்கும் நல்ல பதவியைப் பிடிக்க வேண்டும் என்பதற்கும் அவர் உழைத்த உழைப்பு ஒப்பற்றது. நான் படிப்பதற்காக என் அண்ணன் இயந்திரம் போல் உழைத்தார். பதவியிலே இருந்த பணி நேரம் போகத் தனி நேரம் எடுத்துக் கொண்டு உழைத்து என்னைப் படிக்க வைத்தார். எனக்குத் தலை வலித்தால் அவருக்கும் வலிக்கும். உடனே மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று மருத்துவம் பார்ப்பவர். தனக்கு நோய் வந்தால் கூட, தன் மனைவிக்கு நோய் வந்தால் கூட, அப்படிப் போய் அவசரம் காட்டமாட்டார். அப்படி ஒரு பாசம் என்மேல். கண்ணை இமை காப்பது போல என்னைக் காத்து வந்தார்.

என் அண்ணியும் அவர் போலத்தான். அவர்களுக்குப் ஒன்றரை வயதில் ஒரு குழந்தை இருந்தது. அக்குழந்தையைக் காட்டிலும் என்மீது அக்கறை கொண்டிருந்தார்கள்.

நான் தேர்வில் வெற்றி பெற்றால் அவர்கள் மகிழ்வார்கள். மதிப்பெண் குறைந்தால் மனமுடைவார்கள். அத்தகைய ஈடுபாடு கொண்ட அவர்கள் மனம் வருந்தும்படி நான் செய்யலாமா?

**நாடகம் :**
ஒருமுறை 'பழிக்குப்பழி' என்ற நாடக ஒத்திகையை நான் பார்த்துக் கொண்டிருந்தபோது, அதை உண்மை என்று எண்ணி என் அண்ணன் அலறியபடி மயங்கி கீழே விழுந்துவிட்டார். ஏனெனில் அந்த நாடகத்தில் நான் கதாநாயகனாகவும், ராமு துன்மார்க்கக் கள்வனாகவும் வேஷம் போட்டிருந்தது அவருக்குத் தெரியாது. நான் ராமுவின் மென்னியைப் பிடித்து அழுத்தி, அவன் மார்பின்மேல் உட்கார்ந்து கொண்டு கையிலுள்ள கத்தியால் அவனைக் கொல்லப்போவதாக நடித்ததை அண்ணன் உண்மையென நம்பி விட்டார்.

**முடிவுரை :**
என் பத்தாவது வயதில் தாயார் இறந்தபிறகு, இன்று வரை என் அண்ணன்தான் எனக்கு எல்லாம் என்றால் அது மிகையாகாது.

**V.**

15. **திரண்ட கருத்து :**
வானத்தில் ஏவுகணைகளை விட்டு உலகைக் கலங்க வைப்பதற்கும், இசையில் தமிழைச் சேர்த்து உலகை மயக்குவதற்கும், வாளேந்திப் போரிட்டுப் பகைவரை அழிப்பதற்கும், எண்ணிலடங்காதத் தமிழர்கள் உள்ளனர் என்னும் நிலையை நாம் என்று காண்போமா?

கண்களும் ஒளியும், மலரும் வாசமும் ஒன்றோடு ஒன்று பிணைந்திருப்பவை. அது போல தமிழ் நாட்டில் உள்ள பெண்களும் ஆண்களும், கடல் போன்ற அன்பால் சமமாக உள்ளனர் என்று பாடும் பாடல் நம் காதில் பாய்ந்துப் பருகுகின்ற நாள் என்று வருமோ?

என்று பாவேந்தர் பாரதிதாசன் தம் ஏக்கத்தைப் பாடலில் காட்டியுள்ளார்.

**மையக்கருத்து :** தமிழர்கள் அறிவியல், இலக்கியம், வீரம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றும், ஆண்களும் பெண்களும் அன்போடு சமமாக வாழ வேண்டும் என்றும் தம்முடைய அவாவை வெளிப்படுத்தியுள்ளார், பாவேந்தர் பாரதிதாசன்.

| **அடி எதுகை (பாடல் 1)** | **(பாடல் 2)** |
|---|---|
| வி<u>ண்</u>ணிடையே | க<u>ண்</u>களும் |
| ப<u>ண்</u>ணிடையே | பெ<u>ண்</u>களும் |
| ம<u>ண்</u>ணிடை | த<u>ண்</u>கடல் |
| எ<u>ண்</u>ணிலா | ப<u>ண்</u>வந்து |

**சீர்மோனை**

| | | |
|---|---|---|
| <u>ப</u>ண்ணிடை | – | <u>பா</u>ரிடை |
| <u>எ</u>ண்ணிலாத் | – | <u>எ</u>னும் |
| <u>க</u>ண்களும் | – | <u>க</u>வின் மலர் |
| <u>பெ</u>ண்களும் | – | <u>பெ</u>ருந்தமிழ் |
| <u>ப</u>ண்வந்து | – | <u>ப</u>ருகுநாள் |

**இயைபு**
பாடலடியின் இறுதிச்சீர் ஒன்றி வருவது இயைபு

எ.டு. கலக்குதற்கும்
மயக்குதற்கும்
மாய்ப்பதற்கும்

**முரண்**
பாடலில் எதிர்ச்சொற்கள் அமைவது முரண்.
எ.டு. ஆண்கள் × பெண்கள்

**அணி**
பாடலில் 'போல' என்னும் உவம உருபு வெளிப்படையாக அமைவது உவமையணி.
எ.டு. கண்களும் ஒளியும் போல
கவின்மலர் வாசம் போல

**சுவை**
இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு ஆகியவை பயின்று வந்துள்ளதால் இனிய சந்தம் நம் செவிகளுக்குத் தேனாகப் பாயும்படி இப்பாடல் அமைந்துள்ளது.

**VI.**

16. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
17. உயிர் கொடுப்பான் தோழன்.
18. முள்ளை முள்ளால் எடு.
19. உங்கள் அன்பான வாழ்த்துச் செய்திக்கு மிகுந்த நன்றி.
20. கட்டுரை எழுதுவது என்பது ஒரு கலை.
21. கல்வி என்பது நன்னெறிகளை வளர்ப்பதாகவும், ஊக்குவிப்பதாகவும் இருக்க வேண்டும்.

VII.

22.

அ) **"பதறிய காரியம் சிதறும்"**

கலியன் அவசரக்காரன். ஆத்திரக்காரனும் கூட. இரண்டும் சேர்ந்து அவனைப் பலமுறை சிக்கலில் மாட்டி இருக்கிறது. கெட்டிக்காரனாக இருந்தாலும் இதுவரை அவன் வேலை பார்த்த அலுவலகங்கள் பத்து. அவன் இருக்கும் தற்போதைய தனியார் அலுவலகம் பத்தாவது. ரூபாய் இருபத்தையாயிரத்தைக் கலியனிடம் கொடுத்து அந்த அலுவலக மேலாளர் வங்கியில் கட்டிவரச் சொன்னார். பணத்தைப் பார்த்ததுமே கலியனின் கை கால்கள் நடுங்கின. திருடர் பறித்துக் கொண்டால், என்ன செய்வது, காணாமல் போனால் என்ன செய்வது என்று பயந்து கொண்டே வங்கிக்குச் சென்றான்.

வங்கிமுன் மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டு, வங்கிக்குள் சென்று விட்டான். அவசரமாகத் திரும்பி வந்து பார்த்தபோது, மோட்டார் வண்டியின் பெட்டியிலிருந்த பணம் களவு போயிருந்தது. பதறிய காரியம் சிதறும்.

ஆ) **"வாய்மையே வெல்லும்"**

அரிச்சந்திரன் உண்மைக்குப் பெயர் போனவன். அவன் உண்மையைத் தவிரப் பொய் என்பதைப் புலன்களில் உணராதவன். மனைவியையும் மக்களையும் அரச போகத்தையும் வாய்மைக்காகவே விட்டு விட்டு வாழ்நாளில் துன்பச் சுமையைச் சுமந்தவன்.

"பதி இழந்தனம் பாலனை இழந்தனம் பெற்ற
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம்"

என்று கடைசிவரை வாய்மையின் எல்லையில் நின்றவன். காந்தி அடிகள் ஒருமுறை அந்த நாடகத்தைப் பார்த்தார். அன்றிலிருந்து காந்தி அடிகளும் பொய் புகலுவதில்லை எனச் சபதமேற்றார். அதுவே அவர் வாழ்வின் பெருந்திருப்பமாக அமைந்தது.

இ) **"தன்கையே தனக்குதவி"**

பிறரை நம்புவது தவறன்று; ஆனால், தன் காலில் நிற்பதும், தன் கையே தனக்குதவி என்று வாழ்வதும் பிற நம்பிக்கைகளைவிட மேலானது.

குமரவேலர் தன்னுடைய பிள்ளைகள் இருவரையும் எப்படியாவது மேல் படிப்புப் படிக்க வைத்துப் பெரிய மனிதர்களாக்கிட வேண்டும் என விரும்பினார். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர்; குழந்தைகள் அவருக்குச் சற்று காலங்கடந்தே பிறந்தன. அதனால் ஓய்வு பெறும் வயதுக்குள் அவர்களை உயர்ந்த படிப்பிலோ, உயர்பதவியிலோ அமர்த்திப் பார்க்க கொடுத்து வைக்கவில்லை. தான் நிரம்ப செலவு செய்து தங்கைகளைப் பெரிய இடத்தில் திருமணம் செய்து கொடுத்திருந்தாலும் அவர்கள் கூட அவர் நிலையை உணர்ந்த பாடில்லை. இருவரையும் பொறியியல் படிப்பில் சேர்த்துவிட்டார். மதிப்பெண்கள் நன்கு எடுத்திருந்ததால் இலவசச் சீட்டில் இடம் கிடைத்து விட்டது. யானைக்குத் தீனிபோட வேண்டுமே! அதுபோல் அந்தப் படிப்புக்குப் பணம் போதவில்லை. அவரது ஓய்வூதியம், உண்பதற்கே சரியாக இருந்தது.

நிலம் கொஞ்சம் ஊரில் இருந்தாலும் அது சரியான விலைக்குப் போகும் நிலை இல்லை. முடிவில் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். கடன் வாங்குவதைவிட அது நல்ல வழி. எங்காவது ஒரு பள்ளியில் சிறு பள்ளியாக இருந்தாலும்கூட வேலைக்குச் சேர்ந்து ஒரு நாலாயிரம் ஐந்தாயிரம் சம்பாதிக்கலாம் என்பதுதான் அது.

**(அல்லது)**

**"நட்பு"**

ஒன்று கூடி வாழ்ந்திடு
உறவை நாடி மகிழ்ந்திடு
நன்மை செய்து வாழ்ந்திடு
நல்ல குணம் கொண்டிடு
நல்ல நட்பை பெற்றிடு
நம்பிகையோடு வாழ்ந்திடு
நல்ல நட்பை ஆபத்தில்
அழகாய் அறிந்திடு
நல்ல நட்பு நாளும் பூக்கும்
தீய நட்பு நாளும் உதிரும்
நல்ல நட்பு சகோதரனை விட
சக்தி உடையது.

**(அல்லது)**

**"இயற்கை அழகு"**

நீலவான் மேல்நல்ல மேகக் கூட்டம்
  தீபாவளிக் கடைபோல கலைந்து நிற்கும்!
கோலமாய்க் கோடுகளும் போட்டு நிற்கக்
  கொத்துமலர்க் கொடிகள்போல மின்னல் கூட்டம்!
ஞாலமெல்லாம் விரிந்துநிற்கும் நிலவும் நல்ல
  நட்சத்திரக் கூட்டங்கள் நம்பிக் கையாய்க்
காலமெல்லாம் விளங்குவதால் வாழ்க்கை என்னும்
  கவினுடைய சோலைபோல் மகிழ்வாய் ஆகும்!

**காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.**

16. இந்திய விண்வெளிப் பாதுகாப்புத்துறையின் தந்தை என்று போற்றப்பட்டார்.
17. சிறுவனாக இருந்தபோது ஒரு நாள் ஒரு பத்திரிகையில் வெளியான புதுமையான அறிவியல் செய்தி அவரது மனதைக் கவர்ந்தது.
18. அவரது முழுப் பெயர் அபுல் பக்கீர் ஜைனுலாப்தீன் அப்துல்கலாம்.
19. பொம்மைகளைத் தனித்தனியாகப் பிரித்துவிட்டு அவற்றை மறுபடியும் இணைக்கும் முயற்சி.
20. சென்னை எம்.ஐ.டி தொழில்நுட்பக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்தார்.
21. டாக்டர் அப்துல்கலாம்.
22. ஐ.எஸ்.ஆர்.ஓ. என்ற பாதுகாப்புத் துறை.

**VIII.**

23. இங்குள்ளவை எல்லாம் நல்ல பழங்களே.
24. நீதான் என் உயிர்த் தோழன்.
25. கொத்தித் திரியும் அந்தக் கோழி.
26. ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்.
27. இலை – வாழை இலை உணவு உண்ணப் பயன்படும்.
    இழை – பட்டு நூல் இழை மிருதுவாக இருக்கும்.

    **(அல்லது)**

    ஒலி – வாகனங்கள் ஏற்படுத்தும் ஒலியினால் பலருடைய நிம்மதி குலைகிறது.
    ஒளி – நேற்று பௌர்ணமி ஒளியில் கடற்கரையில் என் நண்பர்களுடன் விளையாடினேன்.
28. 'வாழ்க தமிழ்' என்று அவனா சொன்னான்? அறிந்து சொல் எனக்கு.
29. நீரிழிவு நோயாளி இனிப்பு சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.
30. காகம் கரையும், நாய் குரைக்கும்.
31. சாரைப் பாம்பு குருவிக் கூட்டில் நுழைந்தது.
32. கீட்ஸ், "கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை" என்றார்.